Registered as a News paper in Ceylon ★ விலை சதம் 20

# ஈழநாடு

வார மலர்

மலர் 13 | புரட்டாதி 17 | ஷஃபான் 12 | ஞாயிற்றுக்கிழமை | (3—10—71) | இதழ் 234




# திருமலை எங்கும் தமிழ் ஆர்வம் பொங்கியது

## கல்வி அமைச்சரை தமிழரசு எம். பி. க்களும் வரவேற்றனர்

( நமது சிறப்பு நிருபர் )

திருகோணமலை, சனி

திருகோணமலையில் நடைபெறும் தமிழ்விழாவின் இறுதிநாள் நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக கல்வி அமைச்சர் கலாநிதி பதியுதீன் மஹ்மூத் இங்கு வந்து சேர்ந்தார். சென்ஜோசப் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மாணவர் அணிவகுப்பை ஏற்றுக் கொண்டார்.

திருகோணமலையில் நடைபெறும் பிரமாண்டமான இவ்விழாவிலேயே கல்விமந்திரி கலந்துகொள்கிறார். சீனக்குடா விமான நிலையத்தில் கல்வி அமைச்சருக்கு அமோக வரவேற்பு அளிக்கப்பட்டது. இவ்வரவேற்பில் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த திருகோணமலை எம் பி திரு நேமிநாதனும் மூதூர் இரண்டாவது எம் பி திரு தங்கத்துரையும் கலந்துகொண்டனர்

தபால் தொடர்பு உதவி அமைச்சரும் மூதூர் முதலாவது எம் பியுமான ஜனாப் அப்துல் மஜீத் விமான நிலையத்தில் அமைச்சரை வரவேற்றார். திருகோணமலை அரசாங்க அதிபர் திரு திஸ்ஸ தேவேந்திரா கல்விப் பகுதி அதிகாரிகள் ஆசிரியர்கள் விமான நிலையத்தில் திரண்டிருந்தனர்

கல்வி அமைச்சர் விமான நிலையத்திலிருந்து ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டார். தமிழ்விழாவை யொட்டி, திருமலை விழாக்கோலம் பூண்டிருந்தது. திக்கெல்லாம் ஜோடனைகள்; தெருவெல்லாம் தோரணங்கள்; மின்னும் விளக்கொளிகள்; மின்சார தீபங்கள், சந்திக்குசந்தி அலங்கார வளைவுகள். தெருவுக்கு தெரு பந்தல்கள். எங்கும் ஒரே தமிழ் உணர்ச்சி பொங்கி வழிந்து கொண்டிருந்தது.

தமிழ் விழாவையொட்டி சென் ஜோசப் கல்லூரியில் நடைபெற்ற பொருட்காட்சியையும் அமைச்சர் பார்வையிட்டார். அமைச்சருடன் கல்வி அமைச்சின் நிரந்தரச் செயலாளர் [illegible]. கல்விமா அதிபரும், இவ்விழாவிற்கு வந்திருந்தனர்.



இவ்விழாவில் அகில இலங்கையிலிருந்தும் (21 மாவட்டங்களில்) 171 பாடசாலைகளைச் சேர்ந்த 750 மாணவமாணவிகளும், 350 ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். திருகோணமலையில், மாணவமாணவிகள், ஆசிரியர்கள் தங்கியிருப்பதற்கான வசதிகள் செய்யப்பட்டிருந்தன

ஸ்ரீ ல சு

## கட்சியிலிருந்து பிறின்ஸ் குணசேகரா நிறுத்தப்பட்டார்

(நமது நிருபர்)

ஹபராதுவ ஆசனத்திற்கான உறுப்பினர் திரு பிறின்ஸ் குணசேகரா ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி உறுப்பினர் பதவியிலிருந்து நிறுத்தி வைக்கப்பட்டுள்ளார்

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சித் தலைவர் திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவின் தலைமையில் அலரிமாளிகையில் நடைபெற்ற கட்சியின் உயர்மட்டக் குழுவின் முடிவை அடுத்து இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

கட்சியினரிடையே பிளவை ஏற்படுத்தும் வகையில் நடக்கும் எந்த ஓர் உறுப்பினரையும் கட்சியிலிருந்து நிறுத்திவைக்க அனுமதிக்கும் சுதந்திரக்கட்சியின் 14 (4) பிரிவின் இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கட்சியிலிருந்து திரு குணசேகராவை நிறுத்திவைக்கும் முடிவை கட்சிக் காரியதரிசி திரு கே பி இரத்னாயக்கா அனுப்பிவைத்தார்.

அண்மைக்கால அவரது நடவடிக்கைபற்றியும் அவெபெரி பிரபு சம்பந்தமாக நடந்துகொண்ட முறைபற்றியும் விளக்கம் அளிக்கும்படி கோரப்பட்டுள்ளார்.

# கி. வங்க அகதிகளுக்கு உதவ 10 கோடி டாலர்

## காங்கிரசிடம் அனுமதி கோருகிறார் அதிபர் நிக்சன்

நியூயோர்க், ஒக். 2

கிழக்கு வங்காளத்திலுள்ள மக்களுக்கும் இந்தியாவுக்குள் வந்திருக்கும் அகதிகளுக்கும், மனிதாபிமான அடிப்படையில் உதவி புரிவதற்கு 10 கோடி டாலர் நிதி ஒதுக்க அனுமதிக்குமாறு அமெரிக்க அதிபர் நிக்சன் காங்கிரசைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

### பிரான்ஸ் அமைச்சர் கருத்து

கிழக்கு வங்கத்தில் அரசியல் தீர்வு காணப்படாவிட்டால் இந்தியத் துணைக்கண்டத்தில் துயர விளைவுகள் ஏற்படுமென பிரான்ஸ் வெளியுறவு அமைச்சர் ஐ. நா. பொதுச்சபையில் அச்சம் தெரிவித்துள்ளார்.

### சௌத்திரி நிபந்தனை

வங்காளத்தில் அமைதி ஏற்படவேண்டுமானால் மூன்று அம்சங்களை யாஹ்யா ஆட்சியினர் முதலில் ஏற்றுக்கொள்ளவேண்டுமென ஐக்கிய நாடுகளின் பொதுச்சபை உறுப்பினர்களுக்குத் தங்கள் கருத்தை எடுத்துச் செல்லச் சென்ற வங்காள தேச தூதுக்குழுவின் தலைவர் திரு சௌத்திரி நியுயோர்க்கில் பத்திரிகையாளர்களுக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கிழக்கு வங்காளத்தைச் சுதந்திர நாடாக ஏற்றுக்கொள்ளவேண்டும். விசாரணை செய்யப்பட்டுவரும் அவாமிலீக் தலைவர் ஷேக் முஜிபுர் ரஹ்மான் எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலை செய்யப்படவேண்டும், கிழக்கு வங்கத்திலுள்ள பாகிஸ்தான் இராணுவத்தினர் வெளியேறவேண்டும் என்ற மூன்று நிபந்தனைகளையுமே அவர் வலியுறுத்தினார்.

திரு. சௌத்திரி மேலும் தெரிவிக்கையில், கிழக்கு வங்காளத்தில் ஏற்பட்ட குழப்பத்திற்கு யாஹ்யா ஆட்சியினரே காரணம். அவர்கள்தான் கிழக்கு வங்கத்தை. [illegible] நாடாக நினைத்து இன் [illegible] கொலை புரிந்துவருகிறார்கள் என்றார்.

### மேலும் ஒருவர் விலகல்

புதுடில்லியிலுள்ள பாகிஸ்தான் தூதரகத்தைச் சேர்ந்த அப்துல் சாகிப் என்ற பெயரையுடைய மற்றொருவர் பதவி விலகி வங்காள தேசத்திற்கு ஆதரவு தெரிவித்துள்ளார். இவரது குடும்பத்தினர் கிழக்கு வங்காளத்தில் இருக்கின்றனராம்.

### பொட்கர்னி அச்சம்

கிழக்கு வங்காளத்தில் நடக்கும் நிகழ்ச்சிகளும், இந்தியா வந்திருக்கும் அகதிகள் பிரச்சினையும் உலக அமைதிக்கும், இந்திய துணைக் கண்டத்தின் அமைதிக்கும் ஆபத்தை விளைவிக்கும் என இந்தியா வந்துள்ள சோவியத் அதிபர் திரு. பொட்கர்னி கருத்துத் தெரிவித்துள்ளார். திரு. பொட்கர் [illegible] முக மாக இந்திய ஜனாதிபதி திரு. வி. வி. கிரி அளித்த விருந்துபசாரத்தில் பேசுகையிலேயே சோவியத் அதிபர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அ. எ. வி. சங்கக் கூட்டத்தில்

# முஜிபுரை விடுதலை செய்யக் கோரும் பிரேரணை

வெள்ளவத்தை, சனி

கிழக்குப் பாகிஸ்தானின் தனிப்பெரும் தலைவரான ஷேக் முஜிபுர் ரஹ்மானை உடனடியாக எவ்வித நிபந்தனையுமின்றி விடுதலைசெய்ய வேண்டுமென்றும் கிழக்குப் பாகிஸ்தானில் குடியியல் ஆட்சியை ஏற்படுத்தவேண்டுமென்றும் பாகிஸ்தான் தலைவரை கேட்டுக்கொள்ளும் பிரேரணையொன்று இம்மாதம் 4ம் தேதி நடைபெறவிருக்கும் இலங்கை அஞ்சல் எழுதுவினைஞர் சங்க கூட்டத்தில் பிரேரிக்கப்படவிருக்கிறது.

இலங்கை அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் 10வது வருடாந்தக் கூட்டம் கொழும்பு வை. எம். பி. ஏ. மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

சுதந்திரமும் சமாதான விருப்பமுமுடைய கிழக்குப் பாகிஸ்தான் மக்களால் ஜனநாயக முறையில் தெரிந்தெடுக்கப்பட்டதனிப் பெரும் தலைவராகிய திரு. ஷேக் முஜிபுர் ரஹ்மானை அநீதியான முறையில் கைது செய்து சிறையில் வைத்திருப்பதை கண்டிப்பதெனவும் அப்பிரேரணையில் கூறப்பட்டுள்ளது.

கீழ்க்காணும் பிரேரணைகளும் இக்கூட்டத்தில் சமர்ப்பிக்கப்படவிருக்கின்றன.

ஆங்கிலமூலமாக சேவைக்குச் சேர்ந்த சிங்கள ஊழியர்கள் தங்களது பதவி உயர்வுப் பரீட்சைகளுக்கு சிங்களத்தில் எழுத உரிமை வழங்கியதுபோல ஆங்கில மூலமாகச் சேர்ந்த தமிழ் அரசாங்க ஊழியர்களுக்கு தங்களது தாய்மொழியான தமிழ்மூலம் பதவி உயர்வுப் பரீட்சைகள் எழுத அனுமதிக்கவேண்டுமென இச்சங்கம் கேட்டுக்கொள்கிறது. இதனால் இவர்கள் இதர சக ஊழியர்களுடன் பரீட்சை செயில் தகமைபெறத்தக்க வாய்ப்பு அளிப்பதாக இருக்குமென்பதை சங்கம் வலியுறுத்துகின்றது.

12-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காந்திஜி கற்றுத்தந்த உத்தி!




வன்முறைக்குப் பதிலாக சத்தியத்தையும் அன்பையும் பயன்படுத்தி பூசலைத் தீர்க்கும் புதிய முறை ஒன்றை உலகுக்கு எடுத்துக் காட்டியதற்காக காந்திஜியைச் சமயச்சார்பற்ற தன்மையில் நம்பிக்கை உள்ளோர் புகழ்ந்துரைத்திருக்கிறார்கள். அதை அவர்கள் பலதடவை ஓர் 'உத்தி' என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். சமயச்சார்பின்மைவாதிகள் மகாத்மாவைப் புரிந்துகொண்டிருக்கும் விதம் பிரச்சினைக்கான பதிலிலும் அதே பிரச்சினை மறைந்திருப்பதைப்போல இருப்பதால் அந்த 'உத்தி' பயனற்றதாய்ப்போய் விடுகிறது. அன்பு சத்தியம் ஆகியவற்றை முன்னிறுத்தி அவற்றின் ஆழத்திற்குச் சென்று காந்திஜி தந்துள்ள தீர்வு முறையை நடைமுறை உண்மையாக்குவதற்கு எது தேவையோ அதைக் கண்டு பிடிக்கவேண்டும்.

### கடைச் சரக்கல்ல

தவறுகளுக்கு எதிராய்ப் போராடுவதற்கு அஹிம்சையின் அடிப்படையில் பயனுள்ள ஒரு 'புதிய' உத்தியை உருவாக்கியவர் என்றமுறையில் காந்திஜியை வெளிநாட்டு அன்பர்கள் பாராட்டியிருக்கிறார்கள். காந்திஜி கற்றுத்தந்தது ஓர் 'உத்தி' யாகும் என்ற கருத்தினால் தவறும் ஏமாற்றமும் ஏற்பட்டிருக்கின்றன. நிலக்கரிக்குப் பிறகுக்கும் பதிலாக மின்சாரத்தைப் பயன்படுத்தி சமையல் செய்வதற்கான எரிபொருள் சக்தியைப் பெற்றுவருகிறோம். ஆனால் அதேபோல காந்தி வாழ்ந்த காலத்துக்கு முந்தைய நாட்களில் நாம் வன்முறையின் மூலமும் குழப்பங்களின் மூலமும் பெற முயன்றவற்றை இப்போது பெறுவதற்கான மற்றொரு கருவியல்ல அஹிம்சை. தீமைக்கெதிரான எந்தப் போராட்டத்திலும் அன்பையும் சத்தியத்தையும் பிரயோகிப்பதுதான் மகாத்மா காந்தியின் உத்தி என்பதில் சந்தேகமில்லை. ஆனால் அன்பையும், சத்தியத்தையும் கடையில் வாங்கமுடியாது. பீரங்கிகளையும் துப்பாக்கிகளையும்போல இவற்றை விலை கொடுத்து வாங்க இயலாது.

நான் அறநெறிச்சக்தி வருகிறது. ஆத்மீக ஆற்றல் என்று காந்திஜி இதைக் குறிப்பிடுவார். காந்திஜி கற்றுத்தந்ததைசௌகரியத்துக்காகவோ, ரத்தம் சிந்துவதைத் தவிர்ப்பதற்காகவோ நடைமுறையில் செய்ய விரும்பும், மிகுந்த பற்றுடையோர் பின்பற்றும் அஹிம்சை முறைகள் வன்முறையின் மாறுபட்ட வடிவங்கள்தான். ஒரு தடியையோ, கத்தியையோ, துப்பாக்கியையோ பயன்படுத்தாமல் இருந்தால் மட்டும் அது அஹிம்சையாகிவிடாது. அஹிம்சையின் செயலான அம்சத்தைத்தான் உணரவேண்டும். அதுதான் ஆண்டவனின் ஆதிக்கத்தில் உள்ள உறுதியான நம்பிக்கை. அது இல்லாத இடத்தில் அஹிம்சை தோல்வியுறும். காந்திஜி காட்டிய அஹிம்சைப் பாதையைப் பின்பற்ற வேண்டுமானால் ஆயுதங்களை உபயோகிக்காமல் இருக்கவேண்டும் என்பது பொதுவாக உணரப்பட்டிருக்கிறது. ஆனால்



கட்டுரை:-

**ராஜாஜி**

சொத்துக்களை அவரிடத்தில் அனுப்பி வைக்கும்போதும் விக்டர் ஹியூகோவின் நாவலில் ஏற்கெனவே ஒரு வெள்ளி விளக்குத்தண்டை திருடிச் சென்ற ஜீன் வால்ஜீனிடம் கிறிஸ்துவப் பாதிரியார் மற்றொன்றையும் அனுப்பிய போதும் உடனடியாய் மனமாற்றம் ஏற்பட்டது.

பிருக்கிறான் என்றும், யந்திரங்கள் பொம்மைகளை ஆட்டிப்படைப்பதைப் போல ஆண்டவனின் சக்தி எல்லாவற்றையும் ஆட்டிப் படைக்கிறது என்றும் மேற்கூறிய மந்திரத்தில் கீதை சொல்கிறது. எல்லாவற்றின் இதயத்திலும் ஆண்டவன் மறைந்திருக்கிறான் என்பதுதான் சத்தியாக்கிரகத்தின் ரகசியம். அது ஒரு புதிய உத்தியைப் பிரயோகித்ததினால் உருவானதல்ல நேர்மாறாக, பழைய ஆத்மீக அறிவுரையைப் புரிந்துகொண்டு அதன் உண்மையில் அசையாத நம்பிக்கை வைத்ததால் உருவானதுதான். சமய நம்பிக்கையைச் சந்தேகிப்போருக்கானது அல்ல சத்தியாக்கிரகம். புலன்களால் அறியக்கூடிய உலகிலும், அந்த உலகில் காண்பதைச் சுலபமாக பலவகைப்படுத்துவதிலும், அதாவது விஞ்ஞானத்தினாலும் திருப்திப்படுத்துவோருக்கானது அல்ல சத்தியாக்கிரகம். ஒரு அழகான வேலைவாடு இருக்கலாம். அதில் மை இல்லாவிடில் அல்லது அதில் தண்ணீர் நிரப்பி விட்டால் அது எழுதாது. காந்திஜியின் பிறந்ததின நூற்றாண்டு விழாவைக் கொண்டாடும்போது அவர் தந்த உண்மையான அறிவுரைகளையும், அவரது மனிதர் கற்றுத்தந்த பாடங்களையும் சிந்தித்து உணருவோம். பழைய சிரமமுள்ள ஒரு முறைக்குப் பதிலாக நவீனமான கருவிஒன்றைக் கண்டு பிடித்தவராக அவரைக் கருதவேண்டாம். காந்திஜி ஒருகண்டு பிடிப்பாளராக இருக்கவில்லை அவர் ஒரு தெய்வீக புருஷராக இருந்தார். ஆதலால்தான் அவரை மகாத்மா என்று அழைத்தோம்.

> "... உள்ளத்தில் வெறுப்பையும் பகைமையையும் வைத்துக்கொண்டு வெளியே வன்முறையை உபயோகிக்காமல் இருந்தால் அது அகிம்சையாகாது ... பீரங்கி, துப்பாக்கி போன்று அன்பும் சத்தியமும் கடைச்சரக்கல்ல ..."

ஆண்டவனிடத்தில் உள்ள நம்பிக்கையிலிருந்துதான் இவை பிறக்கமுடியும்.

### எது அஹிம்சை

இயற்கை ஆற்றலுக்காக முதலில் கால்நடைகளைப் பயன்படுத்தி வந்தோம். பிறகு நீராவியைப் பயன்படுத்தினோம். பின்னர் எண்ணெயை எரிபொருளாய் பயன்படுத்தினோம், அதை படுத்து மின்சக்திக்கு மாற்றினோம். இயற்கை ஆற்றலில் செய்த இந்த மாறுபாடுகள் மகாத்மாகாந்தியின் உத்தியைப் புரிந்துகொள்வதற்கான அடிப்படையை அமைப்பதில்லை. சமய நம்பிக்கையிலிருந்தும் உண்மையான சமயப்பற்றிலிருந்தும்

உள்ளத்தில் வெறுப்பையும் பகைமையையும் வைத்துக்கொண்டு வெளியே வன்முறையை உபயோகிக்காமல் இருந்தால் அது அஹிம்சையாகாது என்ற காந்திஜியின் எண்ணம் பொதுவாக உணரப்படவில்லை.

எதிர்களின் வெறுப்பு, பொய்மை, வன்முறைஆகியவற்றுக்கு எதிராய்ப் பயன்படுத்துவதற்காக காந்திஜி நமக்குத்தந்துள்ள புதியகருவிதான் அன்பும் சத்தியமும் என்று கூறுவது எளிது. உலகின் இனப் பூசல்களையும் பொருளாதார அரசியல் தகராறுகளையும் அன்புச் சக்தியாலும் சத்தியத்தின் சக்தியாலும் தீர்க்கலாம் என்றும் இவற்றால்தான் தீர்க்க முடியும் என்றும் சொல்வது எளிது ஆனால் நடைமுறையில் இது பிரச்சினையின் பதிலிலும் அதே பிரச்சினை இருப்பதற்கு ஒப்பானதாகும். வெறுப்பு ஏற்படும்வகையில் நடந்து கொண்டுள்ள ஒருவரிடம் நான் எப்படி அன்பு செலுத்துவேன் நீக்ரோக்கள் வெள்ளையரை எப்படி நேசிக்க முடியும்? பாகிஸ்தானிய தேசபக்தர் ஒருவர் எப்படி இந்தியர்களை நேசிக்க முடியும்? இந்திய தேசபக்தர் எப்படி பாகிஸ்தானியர்களை நேசிக்கமுடியும்? தக்க காரணங்களின் விளைவாக அன்புக்கு இடமில்லாமல் அதற்கு முரணானதற்கே இடமுள்ள பட்சம் அங்கிருந்து அன்புச் சக்தி வெளியிட முடியாது. காந்திஜியின் பாதை ஒரு வெறும் சித்தாந்தமாகவோ, ஏமாற்றம் தரும் உத்தியாகவோ மாறுவதைத் தவிர்க்க வேண்டுமானால் அன்பு ஆண்டவனிடத்திலுள்ள நம்பிக்கையிலிருந்தும் மனித இதயங்கள்மீது ஆண்டவனின் ஆதிக்கத்திலிருந்தும் உருவாகவேண்டும். ஷேக்ஸ்பியர் சித்தரித்திருப்பது போல எனுபர்பஸ் தம்மை விட்டுவிட்டு எதிரியுடன் சேர்ந்துகொண்டதும் அதற்குப் பிறகு ஆண்டனி. எனுபர்பஸின்

### யாருக்கு சத்தியாக்ரக ஆயுதம்

எல்லாவற்றின் இதயங்களிலும் ஆண்டவன் குடி

### நன்றியுள்ளவர்களாக



டிராய் நாசின் முற்றுகையும், இயேசு நாதரின் தெய்வப் புனித வாழ்க்கையும் அவர் சிலுவையில் ஏறியமையும், கண்ணன் பிருந்தாவனத்திற்கு வந்தமையும், குருக்ஷேத்திரத்தில் கண்ணனுக்கும் அருச்சுனனுக்கும் நடந்த சம்பாஷணையும், சரித்திரத்திலேயே வானளாவும் சிகரங்களாகக் கருதப்படுகின்றன. டிராயின் முற்றுகை கிரேக்கப்பெருமையை நிலைநாட்டிற்று. பிருந்தாவனத்துக்குக் கண்ணன் ஓடிவந்தது பக்திப்பயிரை வளர்த்தது. இதற்குமுன் வெறும் தியானமும், வழிபாடுந்தான் உலகத்தில் நிலவியிருந்தன. சிலுவையில் அறையப்பட்ட இயேசுநாதர் மூலம் ஐரோப்பாக் கண்டத்தில் செந்தண்மைநெறி நிறுவப்பட்டது. குருக்ஷேத்திரத்தில் நிகழ்ந்த சம்பாஷணையோ மாந்தரை அஞ்ஞானத் தளைகளிலிருந்து விடுவிக்கும் என்பதில் யாத்தசர் ஐயமுமில்லை ஆனால் இத்தகைய செயல்கள் நிகழவே இல்லையென்று சிலர் கருதுகின்றனர்.

இயேசுநாதரைப் பற்றிய தெய்வீகச் செய்திகளை வெறுங்கட்டுக் கதைகள் என்று மொழிகின்றனர். கண்ணன் அவதாரமோ கவிஞரின் கற்பனைத் தறி நெய்யப்பட்டதே தவிரப்பிறிதில்லை என்று கூறுவாருமுளர் இத்தகைய படைப்புகளும் கனவுகளும் உலகத்தில் தோன்றியமைக்காக நாம் நன்றியறிவுள்ளவர்களாக இருக்கவேண்டும். இவற்றை எழுப்பிய கலைஞர்களை வணங்கி நிற்பதுதான் சாலச் சிறந்ததாகும்.

— ஸ்ரீ அரவிந்தர்

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

ஞாயிறு (3-10-71)

394 மீ. & 59 மீ.

செய்திகள்

காலை 6-30 பி.ப.12-45 மாலை 6-00 இரவு 9-00

காலை 6-15 நாதாஞ்சலி 6-20 சைவநற்சிந்தனை 6-25 கத்தோலிக்க நற்சிந்தனை 7-00 பௌத்த நற்சிந்தனை 7-05 மெல்லிசை 7-30 பட்பாட்டுக்கள் 8-30 பௌத்த தர்ம உபதேசம் 8-15 இந்து சமய உரைநிகழ்ச்சி 8-25 செய்திக்கொடுத்தல்கள் 8-30 சைவநீதி 9-00 பெண்ணுலகம் 9-30 நூறுால் இஸ்லாம் 10-00 தொழிலாளர்களுடன் 10-30 எங்கள் விருந்தாளி 11-15 சிறுவர் மலர் 12-00 ஒலிபரப்பு முடிவு.

மாலை 6-10 இடைவேளை 6-15 மெல்லிசை 6-30 கதைப்பாட்டுச்சம் 6 45 வீட்டு வைத்தியம் 7-00 கிறிஸ்தவ நிகழ்ச்சி 7-30 வானொலி குறுக்கெழுத்துப் போட்டி 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 8-25 நாடகம் 9-10 இடைவேளை இசை 9-30 நிகழ்ச்சி அணி 9-45 பாட்டு 10-30 செய்தித் தொகுப்பு.

"லேடன்" LEYDEN

தயாரிப்புகள்

★ பெனியன்
★ ஸ்போட் சேட்
★ ரீ சேட்
★ ரெறி சேட்
★ ரெறி பிளவுஸ்
★ பேபி வெஸ்ட்
★ காலமேஸ் (Nylon & Cotton)

லேடன் காமென்ஸ்

74 A, கே. கே. எஸ். றோட், யாழ்ப்பாணம்.

போன்: 330

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# இல்லறப் பரீட்சை

ச. ம. அச்சுதன்

"தம்பி... உன்ரை மனுஷியன்ரை நடத்தை சரியில்லே. அவளையும் குலசீலனையும் சேர்த்து அக்கம் பக்கமெல்லாம் ஒருமாதிரிக் கதைக்கினம்!"

கூறிமுடித்ததும் முகத்தில் பிசுபிசுத்த வியர்வையைத் தமது சால்வையால் துடைத்து விட்டுக் கொண்டு காரணம் தெரியாத காரணத்திற்காகக் கூறிய தமது உள்ளத்துடன் மெல்ல அவன் முகத்தைத் திருப்பிப்பார்த்தார்.


அவர் முகத்தில் எவ்வித மாற்றமும் இல்லை-சிறிது வாட்டத்தைத்தவிர ஒரு பெரும் மனப்புயலை அவன் முகத்தினூடாக எதிர்பார்த்த ஆசிரியருக்கு அங்கு நிலவிய அமைதி உண்மையில் பெரும் வியப்பையே கொடுத்தது.

ஆசிரியரின் கண்களை நேருக்குநேர் சந்தித்து அவருக்குச் சங்கடத்தை அளிக்க விரும்பாத சிவலிங்கன் தன் பார்வையைத் தாழ்த்தி— "எனக்கு இது முன்னரே தெரிந்த விஷயம்!" என்று கூறினான். அதிர்ச்சியுற்ற ஆசிரியர் வாயடைத்துப் போனார், பி.. தம்மை ஒருவாறு சுதாரித்துக்கொண்ட அவர், "என்னதம்பி! இந்த விஷயம் உனக்கு முன்னரே தெரியுமா?" என்று வியப்பு மேலிடக் கேட்டார்.

"ஓம் மாஸ்டர் உங்களுக்கு அவள் இப்படிப்பட்டவள் என்று இப்பதான் தெரியப் போகுதெனக்கு அவளின் பலயீனம் கல்யாணமான புதிதிலேயேகண்டு கொண்டிட்டன்" என்று கூறிய சிவம் தனது மணவாழ்க்கையின் ஆரம்பகாலத்தை ஒருமுறை எண்ணிப்பார்த்துக் கொண்டான்.

மணமான மறுவாரமே அவன் அவளைக் கொழும்புக்கு கூட்டிக்கொண்டு சென்றது. அங்கு வெள்ளவத்தையில் ஒட்டுக்குடித்தனத்தில் அவர்கள் இல்லறம் ஆரம்பித்தது. அங்கு மங்கையின் பலவீனத்தைப் பயன்படுத்தி அடுத்தவீட்டில் குடிக்கூலிக்கு இருந்த ஒரு வாலிபன் சிவலிங்கன் இல்லாத நேரம் பார்த்து அவளைத் தன் பிரமச்சரிய விரதத்திற்கு ஒரு முறிப்பாகக்கொள்ள முயன்றது. அந்தக் காதல் உறவு அவர்கள் இருவரும் அறியாமலே சிவம் அறிந்து தனக்குத்தானே குமுறியது. அப்போதெல்லாம் அவளின் போக்கை வெறுத்த அவன் வெவ்வேறு காரணங்களைக் கற்பித்து அவளைக் கண்டித்தது. அவள் கருத்தரித்ததும் பிரசவத்தைச் சாக்காக வைத்து அவளை ஊருக்குக் கூட்டிச்சென்றுவிட்டது. பின்னர் ஒரு மகளுக்குத் தந்தையானதும் அவன் தன்னைத் தானே கட்டுப்படுத்திக்கொண்டு அவளைத் தன் அன்பினுள் ஆட்கொள்ள எண்ணி அவளை நேசிக்கத் தலைப்பட்டது. இரண்டாவது மகளின் பிறப்புக்குப்பின் அவள் போக்கிலும் மாறுதல் ஏற்பட்டு அவளுக்கும் அவன்மீது கணவன் என்ற பரிவு ஏற்பட்டது. பின்னர் அது பாசமாக விகசித்தது. அதன் பயனாக அவர்கள் கணவன்—மனைவி உறவில் ஒரு புதிய நெருக்கம் ஈடுபாடு ஏற்பட்டது—எல்லாம் அவன்மனத்தின் அடித்தளத்தில் அடுக்கிவைக்கப்பட்ட செய்திச் சுருள்களே.

இப்போ மீண்டும் அவள் தனிமையில் ஏற்பட்ட சபலத்தினால். மனம் பேதலித்து தூரத்து உறவினனை குண




சீலன் விரித்த ஆசை வலையில் விழுந்து சிக்கிக்கொண்டுவிட்டாள் இதை சிவலிங்கன் போன மாதத்திற்கு முந்திய மாதம் லீவில் வந்து நின்றபோதே சூசகமாக அறிந்துகொண்டான்.

அவன் லீவில் வந்து நிற்பதை அறியாத குணசீலன், ஒருநாள் மத்தியானம் அவளைச் சந்திக்கவந்தது. எதிர்பாராதவிதமாக அங்கு சிவலிங்கனைச் சந்தித்ததும், தான் வந்த காரணத்தைக் கூறமுடியாமல் அவன் தடுமாறியதும், பின் மங்கையின் தகப்பனரைச் சந்திக்க வந்ததாகப் பொய்கூறிச் சமாளித்ததும், மங்கையும் வியர்த்து விறுவிறுத்து வாயடைத்துப் போய் நின்றதையும் இப்போ ஆசிரியர் கூறியதையும் சேர்த்துப் பார்த்த போது தான் கொண்ட சந்தேகம் நியாயமானதே என்ற முடிவுக்கு வந்தான் அவன். அப்பப்பா! அந்த முடிவுதான் எவ்வளவு கசப்பானது! உண்மையும் சில வேளைகளில் மிகவும் கசப்பாக மாறுவதுண்டு போலும்.

'ஏதோ தம்பி மனம் கேட்காமல் சொல்லக்கூடாததைச் சொல்லி உன் மனதைப் புண்படுத்திவிட்டேன்' என்னை மன்னித்துவிடப்பா!' என்று கூறி அங்கு நிலவிய அமைதியைக் கலைத்தார் ஆசிரியர். அவர் குரல் ஏனோ கம்மியிருந்தது.

"இதில் மன்னிக்க என்ன இருக்கிறது மாஸ்டர்? நான் முன்னமே கொண்டிருந்த சந்தேகத்தை ஊர்ஜிதப்படுத்தினீர்கள். அவ்வளவுதான்' என்று அவரை ஆசுவாசப் படுத்திய அவன்,

'ஆனால் இச்செய்தியால் என் உள்ளம் நீங்கள் நினைப்பதுபோல் புண்படப் போவதில்லை. அந்த நிலையைக் கடந்துவிட்டவன் நான், கல்யாணமானபுதிதில் அவளில் சபல சுபாவத்தை எண்ணி எனக்குள் நான் குமுறியதுண்டு ஏன் சில சந்தர்ப்பங்களில் கண்ணீர் விட்டதுமுண்டு. ஆனால் நாளடைவில் அது அவளும் அவளே அறியாமல் உறைந்துவிட்ட பலவீனம் என்பதை உணர்ந்தபின் எனக்கு அவள் மீது ஒரு இரக்கமே ஏற்பட்டது' என்று படபடப்பில்லாமல் அமைதியாகக் கூறினான்.

ஆசிரியருக்கு அவன் கூறியது ஒரு புதிராகஇருந்தது.

'என்னதம்பி இரக்கம் ஏற்பட்டதா?'

ஓம் மாஸ்டர்! ஒரு நோயாளியின் மீது ஏற்படும் இரக்கம்தான் எனக்கு அவள் மீது ஏற்பட்டது. அவளும் ஒருவகையில் நோயாளி தான்'

'நோயாளியா? நீ என்ன தம்பி சொல்கிறாய்?'

'நோய் என்றால் உடல் சம்பந்தமான நோய் அல்ல; உள்ளம் சம்பந்தமான நோய்'

'என்ன தம்பி நீ சொல்லுறது எனக்குவிளங்கவில்லை'

'அவள் என்னில் ஏதேனும் குறையைக் கண்டு அதை நிரவுவதற்காக இப்படி மாறவில்லை; அப்படி இருந்தால் அவள் என்மீது இவ்வளவு பரிவும் பாசமும் வைத்திருக்கமாட்டாள். அதுவும் இந்த இரண்டுகுழந்தைகள் பிறந்த பின் அவள் என்னைத் தன் மூன்றாவது குழந்தையாகவே பாராட்டி சீராட்டுகிருள்.

"தம்பி நான் இப்படிக் கேட்கிறன் என்று குறை விளங்காதே? அப்படிப்பட்டவள் ஏன் இப்படி.........!' என்று முடிக்காமல் முடிக்கக் கூசியவராக நிறுத்திஞர் ஆசிரியர்.

'அதுதான் நான்முன்னமே சொன்னேனே அவள் ஒரு உளநோயாளி என்று. உங்களுக்குத் தெரியுமோ என்னவோ பெண்களில் 'கிளர்ப்பு விரும்பிகள்' என்றொரு ரகம் ஒன்று உண்டு. இங்கிலீஸில் இவர்களை 'திரில் சீக்கேஸ்' (Thrill Seekers) என்று கூறுவார்கள். இவர்களுக்கு ஆண்கள் தங்களைப் பார்க்கவேண்டும்; தங்கள் அழகைக் கண்டு ஏங்கவேண்டும்; அந்த ஏக்கத்தில் அவர்கள் தங்கள் பின்னுல் திரியவேண்டும் என்பதே மகிழ்ச்சி அளிப்பதாக இருக்கும். இவர்களுள் [illegible] பிடித்துக்கொள்வார்கள் சிலர்

சில 'வேற்று இசி' நாடும் ஆண்களிடம் வளமாக மாட்டிக்கொண்டு அதில் இருந்து மீளவழி தெரியாமல் தவிப்பார்கள். இதில் இரண்டாவது ரகம்தான் என்......' என்று முடிக்காமல் நிறுத்தினான் சிவலிங்கன்

அவன் கூறியதைக் கேட்ட ஆசிரியர் அவனை ஒரு புதுமையான மனிதனைப் பார்ப்பதுபோல் பார்க்கிறார். அவருக்கு அவன்கூறிய கருத்துப் புதுமையாகவே இருந்தது; அதே சமயம் வியப்பாகவும் இருந்தது. அத்துடன் அவர் மகிஷைவர்க்கரசியின் கல்லூரி நாட்களையும் ஒருமுறை திரும்பிப் பார்த்துக்கொண்டார். அவன் கூறியதில் உண்மை இல்லாமலில்லை; அந்த நாட்களிலிருந்தே அவளுக்கு அந்த உளநோய் உண்டு என்பது அவருக்கு தெளிவானது.

'ஏதோ தம்பி! உன் பேச்சும் போக்கும் எனக்கு ஒரு புதுமையாகத்தான் இருக்கு'

'இதில் புதுமை என்ன மாஸ்டர் இருக்கு? உணர்ச்சிக்கு முதலிடம் கொடாமல் உள்ளத்திற்கு முதலிடம் கொடுக்கும் எவனும் எடுக்க வேண்டிய முடிவு இதுதான். இந்தமாதிரிக் கருத்துக்களை உள்ளம் ஆரம்பத்தில் ஜீரணிப்பதற்கு சற்று முரண்டு செய்யத்தான் செய்யும். ஆனால் அதே பழக்கமாகி விட்டால் இக்கருத்துக்களே உள்ளத்திற்கு உவகை அளிக்கும் உணவாகிவிடும்

"அதுசரி தம்பி! அப்ப அப்படிப்பட்ட பெண்களைத் திருத்தவே முடியாதா? வாழ்நாள் முழுவதும் அந்த மனநோயாளி நோயாளியாகத்தான் இருக்கவேணுமா?"

'ஏன் திருத்த முடியாது? அது அவளுக்கு வாய்க்கும் கணவனைப் பொறுத்த விஷயம். அவன் அவளை வெறுக்காமல், ஒரு நோயாளியாகப் பாவித்து உண்மையான அன்பும் பரிவுங்காட்டி வருவானேயானால் என்றோ ஒரு நாள் அவள் உள்ளமே அவளைக் குத்திக்காட்டித் திருத்திவிடும். நாளடைவில் அவளை அறியாமலே அவள் தன் கணவனின் ஏகபோக உரிமைப்பொருளாகி விடுவாள் அன்பினுல் முடியாதது என்னமாஸ்டர் இருக்கிறது? இப்படி நான் உறுதியாகக் கூறுவதற்கு காரணம் இல்லாமலில்லை உங்களுக்கே தெரியும் தாய்மை என்பது பெண்களுக்கென்றே வாய்த்த ஒரு சிறந்த பண்புஎன்று நீறுபூத்த நெருப்புப்போல் அது எல்லாப் பெண்கள் உள்ளத்திலும் கனன்று கொண்டே இருக்கிறது. அந்த நெருப்பை சுடர்விட்டெரியச் செய்யும் சக்தி அன்பு ஒன்றுக்குத்தான் உண்டு. அதுதான் மேல்நாட்டு அறிஞன் ஒருவன் "நீ உன் மனைவியிடம் உண்மையான அன்புவை; அவள் உனக்குத் தன் உயிரையே தருவாள். ஏனெனில் அவளில் 'தாய்மை' என்னும் மகாசக்தி அடங்கி இருக்கிறது' என்றுகூறியிருக்கிருன், உயிரையே கொடுக்க முன்வரும் ஒருத்தி அவனுக்காகத் தன் கபாத ஆசையை விட்டொழிக்கவா தயங்கப் போகிருள்?' என்று ஒரு பிரசங்கமே செய்த அவனை வியப்புடன் நோக்கிய ஆசிரியர் ஏதோ அவனைக் கேட்க உன்னி வாயைத் திறந்துவிட்டு மீண்டும் மூடிக்கொண்டதைக் கண்ணுற்ற சிவலிங்கன்.

'நீங்கள் எதைக் கேட்க உன்னிப்போட்டு விட்டுவிட்டியல் என்பதும் எனக்குத் தெரியும்' என்று கூறிச் சற்று ஓய்ந்த அவன் மீண்டும் கூறினான்

"மாஸ்டர் இத்தனை சம்பவங்களுக்குப் பிறகும் அவளை என்னால் வெறுக்கமுடியவில்லை. ஏன்... அவள் இல்லாத ஒரு வாழ்க்கையை என்னால் கற்பனை செய்து கூடப் பார்க்கமுடியாது! அவளைப் பொறுத்தவரை நான் எப்படியோ எனக்குத் தெரியாது. என்னைப் பொறுத்தவரை-- அதுவும் இந்தக் குழந்தைகள் இரண்டும் பிறந்தபின்னர் அவளை நான் எனது உடலினுள் ஓர் உடலாக, உயிரினுள் உயிராகவே எண்ணுகிறேன், தன்னைத் தானே எப்படி வெறுத்துக் கொள்ளமுடியும்? தோற்றத்தில் [illegible]யையே உரித்து வைத்திருக்கும் என்குழந்தைகளில் நான் அவளையே காண்கிறேன்; அவளில் குழந்தைகளைக் காண்கிறேன். ஒருவேளை அதுதான் என் மனநிலைக்குக் காரணமோ என்னவோ? எது எப்படியானாலும் அவள் எனது ஏகபோக உடைமையாகும் நாள் வெகுதூரத்தில் இல்லை என்பதற்கு இன்று மத்தியானம் நடந்த அந்த நிகழ்ச்சி ஒன்றே போதும்!' என்று அவன் சற்று ஆவேசம் வந்தவனைப்போல் கூறியபோது. மாலை இளம் வெய்யிலிலே இலேசாகக் கண்ணீர் பனித்திருந்த அவன் கண்கள் பளீர் என்று சுடர்விட்டன.

விநாயகர் ஆலயத்தில் மாலைப்பூசைக்கு மணி அடித்தார்கள். ஆசிரியரின் உடல் ஏனோ அவரை அறியாமலே ஒருதரம் சிலிர்த்துக்கொண்டது அப்போது சிவலிங்கனின் அருமைப் புதல்விகளான வசந்தியும் சுகந்தியும் ஒருவரை ஒருவர் துரத்திக் கொண்டு அங்குவந்து சேர்ந்தார்கள்.

'அப்பா! அம்மா இராசவள்ளிக்கிழங்கு அவிச்சிருக்கிறு உங்களைக் கட்டிவரட்டாம்' என்றுகூறினள் மூத்த சிட்டு வசந்தி. அவர்கள் இருவரையும் வாரித் தன் மடியில் இருத்திக்கொண்டு.

'நீங்க சாப்பிட்டியளா?' என்று பரிவுடன் கேட்டான் சிவம்.

'இல்லையப்பா? அம்மா தரமாட்டாளாம்' என்று சிணுங்கினாள் இளையவள் சுகந்தி.

'ஏனும்?'

'அப்பா பாவமாம்! — நீங்க சாப்பிட்ட பிறகுதானும்— நாங்களும் அம்மாவும் சாப்பிடவேணும் எண்டு சொல்லிப்போட்டா' என்றாள் மூத்தவள்.

சிவலிங்கன் மெல்லிய முறுவலுடன் ஆசிரியரைப் பார்த்தான்; ஆசிரியர் பதிலுக்கு அவனைப் பார்த்து புன்னகைத்துக்கொண்டார். குடும்பப் பெண் ஒருத்தி வாய்பொத்தி அடக்கமாகச் சிரிப்பதுபோல் கேணியருகில் நின்ற அரசமரம் காற்றில் கலகலத்தது. மங்கை தான் தன்னை நோக்கிச் சிரிப்பதாக ஆசிரியருக்கு ஒரு பிரமை.

'சரி மாஸ்டர் போவமே?' என்று கூறியவாறு குழந்தைகளை இரு கரங்களிலும் தூக்கிக்கொண்டு எழுந்தான் சிவம். குழந்தைகள் அவன் கழுத்தைக் கட்டிக்கொண்டன.

ஆசிரியர் எழுந்து தம்முகத்தைச் சால்வையால் அழுத்தி

[10ம் பக்கம் பார்க்க]


நிரந்தர சேமிப்புக்கு கீழ்
குறித்தபடி வட்டி கொடுக்கப்படும்

ரூபா 1000/- க்கு மேல் வருடம் 8 சத வீதம்
ரூபா 10000/-க்கு மேல் வருடம் 9 சத வீதம்

ரூபா 3000/- வரை சேமிப்பை 15 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்

ரூபா 5000/- வரை சேமிப்பை 30 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்

ரூபா 10000/- வரை சேமிப்பை 60 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்

ரூபா 10000/ க்கு மேற்பட்ட சேமிப்பை 90 நாள் அறிவித்தலில் எப்பொழுதும் எடுக்கலாம்.

குறிப்பு:-
அறிவித்த நாள் தொடக்கம் வட்டி கொடுக்கப்படமாட்டாது.

மறு விபரங்கட்கு:-

தம்பி அன் கோ.,

திருநெல்வேலி — வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# சுவைமிகு கனிகளைப் பதனிட..

## வடக்கில் தொழில் வளம் -2

நமக்கு அன்றாட வாழ்வில் எத்தனையெத்தனையோ கவலைகள். இதில் நம் நாட்டுப் பழங்கள் வீணாகின்றனவே, பருவத்துக்குப்பருவம் கனிந்து விழும் பழங்களை முழுக்க உண்ண வழியில்லையே அழுகிவிழுகின்றனவே என்பதும் ஒரு கவலை. இது நமக்கு மட்டுமல்ல இன்று அரசாங்கத்துக்கும் ஒரு பழக்கூட்டுத் தாபனத்தை அமைக்கவேண்டும் எனத்தீர்மானிக்கும் அளவுக்குக் கவலையளித்துள்ளது.

**சுவையான கனிகள்**

தீஞ்சுவை பயக்கும் மா, பலா, வாழை ஆகிய முக்கனிகள்-கண்ணைக் கவரும் தக்காளிப் பழங்கள்-சத்து மிகு விளாங் கனிகள்-பல பயன்தரும் கற்பகதருவாம் பனையின் பழங்கள்-புளித்தாலும் உடலுக்கு உறுதிதரும் பல்வகை எலுமிச்சைப்



பழரசம் தயாரிக்க சமீபத்தில் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட நவீன யந்திரங்கள் இவை.

## 'முருகன் இன்டஸ்றீஸ்' எடுத்து வரும் முயற்சி

பழங்கள்-நோய்க்கு நல்மருந்தாகும் தோடம் பழங்கள்-மற்றும் அன்னாசி, பாலை, நாவல் எனப் பல்வகைக்கனிகள்-இவை யாவும் நம் வடமாகாணத்தின் பழச்செல்வங்கள். ஆனால் இவற்றிற் பலவற்றை நாம் எந்நாளும் உண்ணவியலாது. ஒவ்வொரு சீசனுக்கே கிடைக்கின்றன. இவற்றைப் பாதுகாக்கமுடியாமல்தான் நாம் திண்டாடுகிறோம்.

**தெல்லிப்பளையில்,..**

இந்தக் கவலையை நமக்கு ஓரளவுக்குக் குறைக்கிறது தெல்லிப்பளை 'முருகன் இன்டஸ்றீஸ்', மேற்படி பழங்களை பாதுகாத்துத் தரும் சேவையில் இத்தொழிற்சாலை ஈடுபட்டுள்ளது. இந்தப் பழங்களிலிருந்து பழச்சாறு தயாராகின்றது. பழச்சாறு- பழஜாம், மாருசாம் ஆகியன இத்தொழிற்சாலையில் செய்யப்படுகின்றன. இவை போத்தல்களிலும், டின்களிலும் அடைக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு அனுப்புவதற்கான முயற்சிகள்கூட செய்துவரப் படுகின்றன.

இத்தொழிற்சாலையைச் சுற்றிப்பார்க்கையில் அதன் தூய்மையும், சுறுசுறுப்பாக இயங்கிக் கொண்டிருக்கும் அதன்போக்கும் எம்மிருவரையும் பெரிதும்கவர்ந்தன.

நம் நாட்டின் பழவளத்தைப் பதனிடும் பக்குவமான வேலைக்கு ஆக்கமும், ஊக்கமும் கொடுத்து இத்தொழிற்சாலையை உருவாக்கிச் செயல்படுத்தும் அதன் அதிபர் திரு. எம். தியாகராசா தொழிற்சாலையில் பழங்களை யந்திரங்கள் சாறுக்கும் விதத்தைக் காண்பித்து அதன் ஒவ்வொரு செயல்பற்றியும் எங்களுக்கு விளக்கம்தந்துகொண்டிருந்தார். அதன் விஸ்தரிப்பு வேலை பற்றி நாம் கேட்டபொழுது இவ்வாறு கூறுகிறார்:

**'கான்ஸ்' கிடைத்தால்**

எங்களுக்குப் பழங்களைப் பதனிட்டு அடைப்பதற்கு 'கான்ஸ்' என்று கூறப்படும் தகரடப்பாக்களை அரசாங்கம் வழங்கினால் பெருமளவில் பதனிடும் வேலைகளைச்செய்து அன்னிய செலாவணியை நாம் பெறக் கூடியதாகவிருக்கும். மேலும் வடமாகாணத்தில் கொடி எலுமிச்சம் பழங்கள் பெருமளவில் கிடைக்கின்றன. இதில் இருந்து பழரசம் தயாரிக்கவும் தீர்மானித்துள்ளோம். இதுமட்டுமல்ல எங்களுக்குத் தேவையான பழங்களை உற்பத்திசெய்ய பண்ணையொன்றை அமைப்பதுஎங்கள் நோக்கத்தில் ஒன்று. இதனுள் ஏனைய பழ உற்பத்தியாளர்களை விட்டுவிடுவோம் என நினைத்துவிடாதீர்கள். பெருமளவில் பழச் செய்கையில் ஈடுபட்டுள்ள பண்ணையாளர்களோடும் கூட்டுச் சேருவதற்குத் திட்டமிட்டுள்ளோம்

**சக்கையில் மாட்டுத்தீனி**

நீங்கள் சில பழங்களில் இருந்து சாற்றையெடுத்தவுடன் அந்தச் சக்கையை என்னசெய்வீர்கள்? எறிந்து விடுவீர்களா? என, சக்கையின் கதியை அறியும் ஆவலோடு கேட்ட எங்களுக்கு 'அதை வீசிவிடமாட்டோம். சத்தற்றதல்ல சக்கை. அதில் கால்நடை உணவு தயாரிக்க முடியும்' எனப் பதிலளித்தார் திரு. தியாகராசா.

'வடக்கில்கிடைக்கும்பழங்களில் மட்டுந்தான் ரசம், ஜாம் முதலியன தயாரிக்கிறீர்களா' என நாங்கள் கேட்டபோது:-

"வடக்கில்கிடைக்கும்பழங்களை மட்டுமல்ல. வேறு இடங்களில் இருந்தும் கிடைக்கும் பழங்களிலிருந்து பழ ரசம் தயாரித்துள்ளோம். நாங்கள் தயாரித்துள்ள பழ ரசம் யாவற்றிலும் வெளிநாடுகளுக்கு 'சாம்பிள்'கள் அனுப்பியுள்ளோம், அவற்றுள் 'மாம்பழ ஜூஸ்'க்குப் பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது. எமக்கு அரசாங்கத்தின் உதவி கிடைக்குமா ளுக்கு பெருந்தொகையான அளவில் வெளிநாடுகளுக்கு அனுப்பி நாம் நிறைய அந்நிய செலாவணியைச் சம்பாதித்துக்கொள்ள முடியும்" என்றார் அதிபருக்கு அருகேயிருந்த இத்தொழிற்சாலையை உருவாக்குவதற்கு ஊக்கமளித்த திரு. வைரநாதன்.

வடக்கில் தொழில்வளம் பெருகவும் வேலையற்ற இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கவும் வடக்கில் விளையும் பழங்கள் வீண்போகாமல் பாதுகாக்கவும் 'முருகன் இன்டஸ்றீஸ்' போன்ற பல தொழிற்சாலைகள் தோன்றி வடக்கின் பொருளாதார சுபீட்சத்துக்கு உதவவேண்டும்.

**விமலா—நிர்மலா**

★ தரத்திற் சிறந்த
★ நாவுக்குச் சுவையூட்டும்
★ தாகத்தை தீர்க்கும்
"மாங்கோலா"
மாம்பழச்சாறு
உயர்ரக
★ஜாம் ★ஐஸ் ★கிறஷ்
(திருமண வைபவங்களுக்கும், மற்றும் விசேடகொண்டாட்டங்களுக்கும் ஓடருக்கு பழச்சாறு கொடுக்கப்படும், பழங்கள் தந்தும் பெற்றுக்கொள்ளலாம்)
தயாரிப்பாளர்கள்:
'முருகன் இன்டஸ்றீஸ் லிமிட்டெட்'
தெல்லிப்பளை.
8058




### நவீன விவசாய நூல்

நூல்: நெற் செய்கையின் விஞ்ஞான விளக்கம்.

ஆசிரியர்: ஏ. ஐ. சின்னையா (வட்டுக்கோட்டை யாழ். கல்லூரி)

நெற் செய்கையின் தத்துவங்களையும், செய்கைமுறைகளையும் விஞ்ஞான முறையில் அருமையான விளக்கங்களுடன் தந்திருக்கிறார், வட்டு. யாழ்ப்பாணக் கல்லூரி விவசாயப் போதனாசிரியரான திரு. ஏ. ஐ சின்னையா. விவசாயத்துறைக்கு ஈழத்தைப் பொறுத்தவரையில் இது ஒரு புதிய நவீன விவசாய நூல் என்றே சொல்லலாம்.

விவசாய மாணவர்களும், நெற்செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகளும், கமத்தொழில் திணைக்கள அலுவலகர்களும் பயனடையத்தக்க முறையில் இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இந்த நவீன விவசாய நூலின் ஆசிரியர் திரு. சின்னையா ஏற்கனவே ஐந்து விவசாய நூல்களை எழுதியுள்ளார். விவசாயத்துறையின் நுணுக்கங்களை நன்கு ஆராய்ந்து விஞ்ஞான விளக்கங்களுடன் எழுதப்பட்ட இந்நூலை எதிர்காலத்தின் மீது நம்பிக்கையுள்ள ஒவ்வொருவரும் படித்துப் பயன்பெறவேண்டியது அவசியம்.

★ — ராஜ்

அச்சுவேலி - நாவலம்பதி காட்டுமலைக் கந்தசுவாமி கோவில் தேர்த்திருப்பணி மலர்.

கிடைக்குமிடம்: முகாமையாளர், நாவலம்பதி காட்டுமலைக்கந்தன் தேவஸ்தானம், அச்சுவேலி.

இம்மலர் அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக்கந்தசுவாமி தேர் வெள்ளோட்டம் விடப்பட்டதை ஒட்டி வெளியிடப்பட்டுள்ளது. இந்த மலரில் ஆலயத்தின் வரலாறு விளக்கமாகக் கொடுக்கப்பட்டுள்ளது. 'இத் [illegible] பதிப்பின்ள அவர்களின் ஆழ்ந்த கருத்துமிக்க கட்டுரை இதில் இடம் பெற்றுள்ளது. "இறைவன் கருத்து எதுவாயிருக்கும் என்ற விசாரணை தொடங்குமிடமே சமயம் தொடங்குமிடம்" என்றும், "இன்னும் தேர் வடிவம் சரீரத்தைக் குறிப்பதாகும் தேரில் காணப்படும் நான்கு சிங்கங்கள் ஆன்மாக்களின் சிவசாருணியம் இல்லாத லோபகுணத்தையும், பிரபஞ்ச ஆசையையும், விபரீத குணத்தையும் அகங்காரத்தையும் குறிக்கும். எட்டு யானைகள் ஆன்மாவின் அஞ்ஞானம், அபிமானம், ராசதிகுணம், துக்கம், விடயப்பற்று, பலவித கன்மம், உபாதி அவத்தை என்னும் எட்டுவித அனுபவங்களையும் குறிக்கும். கொடிகள் தத்துவங்களைக்குறிக்கும் எனவும் மற்றும் தேரில் உள்ள யாவும் ஒவ்வொரு தத்துவங்களைக் குறிப்பதை விளக்கியுள்ளார்.

பண்டிதை சத்தியதேவி துரைசிங்கத்தின் 'கடவுள் வழிபாடும் ஆன்ம வளர்ச்சியும்' என்ற கட்டுரையும், மதுரகவி இ. நாகராஜன், கவிஞர் வே. ஐயாத்துரை, கவிஞர் காரை செ. சுந்தரம்பிள்ளை ஆகியோரின் செந்தமிழ்க் கவிதைகளும் இம்மலரில் இடம்பெற்றுள்ளன.

இம்மலருக்கு கலாச்சார அலுவல்கள் அமைச்சர் திரு. எஸ். எஸ். குலதிலக, தபால் அமைச்சர் திரு. செ. குமாரசூரியர், கோப்பாய் எம். பி. திரு: சி. கதிரவேலுப்பிள்ளை, திம்மனை எம். பி. திரு. எம். சி. சுப்பிரமணியம், மற்றும் அகில இலங்கை இந்துமாமன்றத் தலைவர் திரு. வி. சிவசுப்பிரமணியம், யாழ். உதவி அரசாங்க அதிபர் திரு. இ. முருகேசம்பிள்ளை ஆகியோர் வாழ்த்துச் செய்திகள் அளித்துள்ளனர்.

— 'மயிலை சிவ'

0 0 0

### நல்லைக் கந்தன் தமிழிசைப் பாடல்கள்

ஆசிரியர்: நல்லைக்குமரன்: வெளியீடு: கிதா பப்ளிகேஷன்ஸ். கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

விலை: 50 சதம்.

இறைவனுக்கு இசை. அதிலும் தமிழிசை மிகமிகப் பிரியமானது. அந்தவகையில் நல்லைப்பதியிருக்கும் கந்தனை அவனுக்குப் பிரியமான நற்றமிழால் நாடேறும் பாடி நம்வசப்படுத்த 31 பாடல்களைக் கொண்ட நல்லதொரு தமிழிசை நூல் நமக்குக் கிடைத்திருக்கிறது.

'நல்லைக்கந்தன் தமிழிசைப் பாடல்கள்' என்ற அந்த நூலின் முகப்புப் படமே நம்மை நேராக நல்லூர்க் கந்தன் சந்நிதிக்கு அழைத்துச் சென்றுவிடுகிறது. உள்ளே (நூலினுள்ளே) நுழைந்தால் "முருகனின் திருநாமம் மனமாரச் செபித்து அடியார்கள் வீதிவலம் வருதல், அதைத்தொடர்ந்து பெருமைசேர் யாகதூளி பிறவி நோய் தீர்க்குமென்று பக்தர்கள் பிரதிஷ்டை செய்தல் போன்ற நல்லைக்குமரனின் கொடியேற்ற நன்னாட் காட்சிகளைப் பார்க்கலாம். அத்துடன் அவன் மயிலேறி வருவதையும் ஞானக்குழந்தையாய் வருவதையும் காணலாம்.

மற்றும் இங்கு இடம் பெற்றுள்ள ஏனைய கவிதைகளும் நல்லூரையும் அங்கெழுந்தருளிய இறைவனையும் புகழ்ந்து சிறப்பிக்கின்றன.

(11-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை விழா என்றால்

# எப்படி இருக்க வேண்டும்?

கலைவிழா என்றால் எப்படி இருக்கவேண்டும்? அந்த இரகசியம் சங்கானை பகுத்தறிவுக்கழக கலையகத்தினருக்குத்தான் தெரியும்!

இல்லாவிட்டால், விடிய விடிய நடந்த கலைவிழாவை இருந்த இடம்விட்டு அசலாமல் ஆயிரத்துக்கு மேற்பட்டவர்கள் கண்மூடாமல் பார்த்துக் கொண்டிருப்பார்களா? இந்த ரசிகர் கூட்டத்தில் அரைவாசிக்கு மேற்பட்டவர்கள் பெண்கள்!

விடிய விடிய நிகழ்ச்சி யொன்றினைப் பார்ப்பது என்றால் முடியாத காரியம். ஆனால் எழுபதைப்போ தாண்டிவிட்ட கலையரசு ஐயா அப்படியே அசையாது விழா நிகழ்ச்சிகளைப் பார்த்துக் கொண்டிருந்தாரென்றால், இந்த 'மேகலா' எம்மாத்திரம்! கலையரசு ஐயா அவர்களுக்குப் பக்கத்திலிருந்து நானும் விழாவை விடியும் வரை பார்த்துவிட்டுத்தான் வந்தேன்!

கலையகத்தாரின் 4-வது ஆண்டுநிறைவுவிழா சென்ற 18-ம் திகதி சங்கானை வோலின்நிலையத்துக்கு முன்னுள்ள மைதானத்தில் நடந்தது.

பல்சுவை

புதுமுறையாக விழா ஆரம்பமாகியது. பல்சுவை நிகழ்ச்சியுடன் விழா தொடங்கியது. கூட்டத்தில் இருக்கும் 16 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர் யாரும் அந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ளலாம். ஆம் என்றோ, இல்லையென்றோ சொல்லாமல் கேள்விகளுக்குப் பதில் சொல்லவேண்டும். விரும்பியவர்கள் பாடலாம், பேசலாம். நடிக்கலாம். சுருங்கச்சொன்னால் தமக்குள்ள திறமைகளைக் காட்டலாம். இத்தனையும் மேடையில்தான் நடந்தது. இந்தப் பல்சுவை நிகழ்ச்சி

நாடகங்களைத் தேர்ந்தெடுக்க ஐந்து மத்தியஸ்தர்கள்.

ஒவ்வொரு நாடகமும் 45 நிமிடநேரம் நடந்தது. மத்தியஸ்தர்களின் தீர்ப்புக்கு மதிப்புக்கொடுக்கும் அதேவேளையில் என் அபிப்பிராயத்தையும் இங்கு என்னால் சொல்லாமல் இருக்க முடியவில்லை.

## அந்த இரகசியம் சங்கானை

## கலையகத்துக்கே தெரியும்

யில் பல சிறுவர் சிறுமியர் கலந்துகொண்டனர். ஆயத்தமில்லாமல் மேடையில் ஏறிய இந்தச் சிறுவர் சிறுமியரின் ஆர்வத்தையும், உற்சாகத்தையும் பாராட்டாமல் இருக்கமுடியாது! இந்தப் பல்சுவைப் போட்டி நிகழ்ச்சியை நடாத்தியவர் க. சற்குணநாதன். பொருத்தமானவர்! பாடுவார், நடிப்பார். அழகாகப் பேசுவார்! இந்த சற்குணநாதன் ஒரு 'ஆல்ரவுண்டர்!'

அடுத்து நடந்தது—

போட்டி! நாடகப் போட்டி. நான்கு நாடகங்கள் மேடையேறின. 18 நாடகங்களில் தெரிந்தெடுக்கப்பட்ட இந்த நான்குநாடகங்களும் இறுதித்தெரிவுக்காக அன்று மேடையேற்றப்பட்டன.

சபாஷ்

நான்கு நாடகங்களில் 'மயானகாண்டம்' சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலை மாணவர்களினால் மேடையேற்றப்பட்டது. மாணவர்களே நடித்தது. முன்னர், பின்னர் மேடையேறிய அனுபவ மிக்கவர்களாக இருக்கலாம். பலமுறை பார்த்து அலுத்துப்போன (நடிகமணி வைரமுத்துவின்)

## [redacted] மேகலா

நாடகமாக இருந்தாலும், பாட்டுகளைப் பொறுத்தவரையில் சில தவறுகள் இருந்தாலும், மிகமிக அருமையாகச் செய்தார்கள். அரிச்சந்திரனுக்கு வந்தவனின் குரல் கணீரென ஒலித்தது. சந்திரமதி பாத்திரத்தை ஏற்றவர் பொருத்தமானவர்.

போகட்டும்! இந்த நாடகப்போட்டியில் முதல்நாடகமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டது. சங்கானை நிகரை வாலிபர் மன்றத்தின் 'ஒளி பிறந்தது' நாடகம்தான்! நல்ல நாடகம்தான்-ஆனால்,

எதிர்காலத்தில் சிறந்த நடிகராகத் திகழக்கூடிய நடிகர் சிவபாலன் (டாக்டராக வந்தவர்) தமிழ் நாட்டுச் சிவாஜியாகமாறுவதைச் சகிக்கமுடியாது இருக்கிறது! அருமையான நடிகர் சிவபாலன். இதனை மனதிற் கொள்ளவேண்டும். ஏழாலை முத்தமிழ்நாடகமன்றத்தினரின் 'தங்கம்' இரண்டாவது இடத்தைப் பெற்றது. சங்கானை வெண்ணிலா நாடக மன்றத்தினரின் 'வல்லவன்' எம். ஜி. ஆர். பாணியில் இருந்தது. இத்தகைய நாடகமும் தேவைதான்! ஆனால் நாடக உலகில் வல்லவர்களாக நினைத்து விடக்கூடாது! நான்காவது இடத்தைத்தான் 'மயான காண்டத்'துக்கு ஏன் அளித்தார்களோ?

கடமையா காதலா?

இதனையடுத்து 'கலையக'த்தினரின் 14-வது தயாரிப்பான - கடமையா? காதலா? என்ற நாடகம் மேடையேறியது. தமிழ் நாட்டுச் சினிமாப் பாணியில் தயாரிக்கப்பட்டபோதிலும்,



கலையக நடிகர் ந. விக்னேஸ்வரன்

விறுவிறுப்பாக இருந்தது. முருகானந்தத்தின் கதைக்கு அருமையான வசனத்தை எழுதியிருந்தார் நா. வே. சண்முகம். டாக்டராகவந்த விக்னேஸ்வரனும், 'காதலன்' தேவராஜாவும் நன்றாக நடித்தார்கள். பெண் பாத்திரத்தை ஏற்று நடித்தவர் நடிப்பையும், அவர் உருவ அமைப்பையும் என்னால் பாராட்டாமல் இருக்கமுடியாது. 'சுமதி'யாக வந்த இந்த வரதராசா காட்சிக்குக் காட்சி 'டிரஸ்' மாற்றிக் கொண்டு வந்து ரசிகர்கள் உள்ளத்தைத் தொட்டார். மற்றும் செ. ஜெயபாலகிருஷ்ணன், சி. மகேந்திரன், க. வில்வராசா ஆகியோரும் இந்த நாடகத்தில் நடித்திருந்தார்கள். இந்த நாடகத்தின் டைரக்டர் கு. முருகானந்தம்.

சங்கானை கலைவிழாவைப் பற்றி நினைக்கும்போது அங்குள்ள ஒருசிலர் என் நினைவில் வந்து போகிறார்கள்.

கலைத்தாகம் கொண்ட அவர்களைப்பற்றிகுறிப்பிடாமலிருக்கமுடியாது.

இந்த கலைவிழா வெற்றிபெற திரைமறைவிலிருந்து உழைத்த இளைஞர்கள் த. ஜெகதீஸ்வரன். நா. வே. சண்முகம். செ. ஜெயபாலகிருஷ்ணன், க. வில்வராசா, க. சற்குணநாதன் போன்றவர்களின் உழைப்புத்தான் இந்தக் கலைவிழாவின் வெற்றிக்குக் காரணம்!

# கொடிகாமத்தில்

# நடந்த

# முத்தமிழ் விழா

சென்ற மாதம் 25ம் திகதி கொடிகாமத்தில் நடந்த முத்தமிழ் விழாவில் இடம்பெற்ற நிகழ்ச்சிகள் நெஞ்சத்தைவிட்டு நீங்காத நல்ல நிகழ்ச்சிகள் என்றே சொல்லவேண்டும். இரவு 8 மணிக்கு ஆரம்பமான முத்தமிழ்விழா அதிகாலை 3 மணிக்கே முடிவடைந்தது. ஆனாலும் விழாவை அமைதியாக இருந்து பார்த்தார்கள்.

கொடிகாமம் இராமநாதன் கழகத்தினர் இவ்விழாவை நடத்தினர். பரதம், நாடகம், வில்லுப்பாட்டு, மெல்லிசைபோன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

உசன் அரசினர் பாடசாலை மாணவிகளின் நடனம் அருமையாக இருந்தது. அடுத்து நடந்தது பாலகிருஷ்ணன் கோஷ்டியினரின் நாதஸ்வர இசை. காதுகளில் இனிக்கின்றது.

திருமதி சரஸ்வதிபாக்கியராசாவின் இனிய இசைவிருந்து நெஞ்சையெல்லாம் நிறைத்துவிட்டது.

சங்கானை நிகரை நாடக மன்றத்தினர் 'ஒளி பிறந்தபோது…' என்ற அருமையான சமூக நாடகத்தினை ஒரு மணி நேரம் நடித்தார்கள். அடுத்து நடந்தது கலைவாணர் வில்லிசைக் குழுவினரின் 'கண்ணகி' கதை; வில்லிசையில் கதை சொன்னவர்: கலாவினோதன் சின்னமணி கே. எஸ். கணபதிப்பிள்ளை வில்லிசை மன்னன்தான்! அவரின் வில்லிசை வல்லமையைத் தனிக்கட்டுரையில் தெரியப்படுத்த வேண்டுமென்கிறார் 'மேகலா'. இப்போதைக்கு ஒன்றுமட்டும் - ஈழத்தில் இன்று "வில்லிசைக்கு ஒரு கணபதிப்பிள்ளை" என்றுமட்டும் மனம் திறந்து சொல்லலாம்,

கண்ணன் கோஷ்டியினர் அருமையானமெல்லிசையை அளித்தனர்.

முத்தமிழ் விழாவின் கடைசி நிகழ்ச்சியாக இடம் பெற்றது-

சங்கானை கலைச்செல்வி நாடகமன்றத்தாரின் 'ஏமாந்த தரகர்'

நாடகம் முடியும்வரை ஒரே சிரிப்பு! தரகர் தம்பையாவாக வந்த சிவபாலன் அருமையான நடிகர் என்பதை நிரூபித்துவிட்டார். சிரிப்புக்கும் சிந்தனைக்கும் விருந்தளித்தார்; 'புழுகர்' தம்புவாக வந்தவர் நடராசா. நல்ல எதிர்காலம் உண்டு. மாப்பிள்ளை 'மைனராக' வந்தவர் முகுந்தன். பரியாரியாக ஜெயசீலன் நடித்தார்.

மொத்தத்தில்- இப்படியான முத்தமிழ் விழாக்கள் ஆங்காங்கே நடைபெறுவதைத் தட்டி எழுப்பத் தேவைதான்.

—'மதுமா'

# புதிய பாதையில்

# வண்ணை கலைவாணர்

# நாடக மன்றம்

(சென்ற வாரத்தொடர்ச்சி)

ஈழத்துத்தமிழ் சினிமாவின்கோலம்

ஈழத்துத் தமிழ் சினிமாத்துறை அரசுவை ஏன்தான் பயன்படுத்த வில்லையோ? ஈழத்தில் தமிழ்ப்படம்எடுப்பவர்களின் தவறான நோக்கங்கள்தான் அரசு போன்ற தரமானகலைஞர்களுக்கு இடமில்லாது போவதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்.

நடிப்பு நுணுக்கங்களை உணர்ந்துகொள்ளமுடியாது நடிப்புத்துறையில் சிறிதளவு கூட அனுபவமில்லாமல் காட்சியமைப்புகளை -கமெராத் திறமையினால் பிரமாதப்படுத்திவிடலாம் என்று எண்ணும் பரிதாபத்துக்குரிய ஈழத்துத்தமிழ்ப்பட டைரக்டர்களுக்கு எங்கே தெரியப்போகிறது அரசு போன்றவர்களின் ஆ…

ஈழத்தின் பிரபல … தாளர்களில் ஒருவ… 'செங்கை'யின் 'இரு ந…கள்' என்ற நாடகத்… முதல் நாடகமாக மே… யேற்றப்போகிறார்கள். தொழில்முறை நாடகமன்… மாக மாறும் வண்ணை கலைவாணர் நாடகமன்றத்தினர் கண்ணனுக்கும் துரியோதனனுக்குமிடையேயுள்ள நட்பின் ஆழத்தை அடிப்படையாகக்கொண்டு எழுதப்பட்டது இந்நாடகம்.

"சினிமாக் குப்பைகளையும்; அந்த உத்திகளையும் கையாண்டு சிவாஜி, எம். ஜி. ஆர் களாக நினைத்துக் கொண்டு மேடையில் ஏறிக் கேலிக்கூத்து ஆடியவர்களால் தரமான சில நாடகங்கள்கூட ரசிகர்கள் மத்தியில் மதிப்பைப்பெறத் தவறிவிட்டது ஆனாலும் நாம்மேடையேற்றிய நாடகங்களை ரசிகர்கள் இதயத்தில் இடம் பெறச் செய்திருக்கிறோம். இனித்தொடர்ந்து இடம் பெறச்செய்வோம். வெற்றி காண்போம்' என்று அரசு சொல்லி முடித்தபோது-தொழில்முறையாகச் செயல்படப்போகும் வண்ணை கலைவாணர் நாடகமன்றத்தின் எதிர்கால வெற்றி அவர் முகத்தில் சொல்லாமல் சொல்லியது எனக்கு.

— பர்மா ராஜகோபால்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற்றாண்டு காணும் குடிச

கொழும்பிலுள்ள குடிசன மதிப்பீட்டு தலைமை காரியாலயத்துக்கு ஒருவர் இன்று சென்றாரானால் அங்கு நடைபெறும் அலுவல்களைக் கண்டு அவர் ஆச்சரியப்படாதிருக்கமுடியாது. இம் மாதம் 20-ம் திகதி ஆரம்பிக்கப்பட்டு நாடெங்கும் நடைபெறும் குடிசன மதிப்பீட்டுக்குத் தேவையான சகல தஸ்தாவேஜுக்களையும் மின்வேகத்தில் இக்காரியாலயம் பார்சல் பார்சலைக் கட்டி தீவின் பல்வேறு பகுதிகளிலும் கடமையாற்றிக் கொண்டிருக்கும் குடிசன மதிப்பீட்டு ஆணையாளர்க்கு அனுப்பிக்கொண்டிருக்கிறது. இத் தஸ்தாவேஜுக்கள் யாவும் ஒக்டோபர் 9-ம் திகதி நடைபெறும். இலங்கையின் 11-வது குடிசன மதிப்பீட்டு வேலைகளுக்கு பயன்படுத்தப்படுகிறது. இக் குடிசன மதிப்பீட்டின் ஆரம்ப வேலைகள் நாடெங்கும் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கிறன.

## தனித்துவம் வாய்ந்தது

பலவாறாக நோக்கினும் இவ்வாண்டு நடைபெறும் குடிசனமதிப்பீடு தனித்துவம் வாய்ந்ததும் அதே வேளையில் முக்கியத்துவம் வாய்ந்ததுமாகும். இந்த முக்கியத்துவத்திற்கு முதலாவது காரணம் இலங்கையின் குடிசன மதிப்பீட்டின் 100-வது ஆண்டு இதுவாகும். அடுத்தக் 'கம்பியூட்டர்' யந்திரம் முதல் தடவையாக குடிசன மதிப்பீட்டுக்குப் பயன்படுத்தப்படுகிறது. இதைவிட இம் மதிப்பீட்டுக்கு விசேஷமாக விரிவான கேள்வித் தொடர் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளமை மற்றுமொரு பிரதான அம்சமாகும். இவற்றை விட மேலும் பல புதிய அம்சங்கள் இம்மதிப்பீட்டுவேலையில் இம்முறை புகுத்தப்பட்டுள்ளன.

## முன்னைய குடிசன மதிப்பீடு

இலங்கையின் முதலாவது குடிசன மதிப்பீடு 1871-ம் ஆண்டு நடைபெற்றது. இதையடுத்து 1931-ம் ஆண்டுவரை ஒழுங்காக ஒவ்வொரு 10 ஆண்டுக்கு ஒரு தடவை மக்கள் கணக்கெடுப்பு நடைபெற்றது. இதன்பின்னர் 1941-ம் ஆண்டு இடம்பெறவிருந்த குடிசன மதிப்பீட்டு வேலை யுத்தத்தின் காரணமாகத் தடைப்பட்டு 1946-ம் ஆண்டு நடைபெற்றது. 1951ம் ஆண்டு மதிப்பீட்டுவேலையும் 1953ம் ஆண்டுக்கு ஒத்திபோடப்பட்டது. உலகெங்கும் ஏற்பட்ட கடதாசித் தட்டுப்பாடே இதற்குக் காரணமாகும். அடுத்துத் தேர்தலின் காரணமாக 1961ம் ஆண்டு நடைபெறவிருந்த குடிசன மதிப்பீட்டு வேலை 1963ம் ஆண்டுக்கு ஒத்திபோடப்பட்டது. இதன் பின்னர் இவ்வாண்டு நடைபெறுகிறது.

## அன்றும் இன்றும்

1871ம் ஆண்டு நடைபெற்ற குடிசன மதிப்பீட்டின்போது ஒவ்வொரு பிரஜையிடமும் 11 கேள்விகள் கேட்கப்பட்டு விபரங்கள் திரட்டப்பட்டன. இவ்வாண்டு நடைபெறும் இவ்வேலையில் 25 கேள்விகள் ஒவ்வொருவரிடமும் கேட்கப்படுகின்றன. இவற்றில் 19 கேள்விகள் எல்லாப் பிரஜைகளிடமும் கேட்கப்படுகின்றன. எஞ்சிய 5 கேள்விகளும் ஜனத்தொகையில் 10 வீத மக்களிடம் கேட்கப்படுகின்றன. 1871ம் ஆண்டு நடைபெற்ற குடிசன மதிப்பீட்டில் இடம்பெற்ற அம்சங்களிலும் பார்க்க இவ்வாண்டு நடைபெறும் மதிப்பீட்டில் கைத்தொழிலாளர் விவசாயிகள், கல்வி கற்றவர் கல்லாதோர், வேலையுள்ளோர் வேலையற்றோர், விவாகமானவர் விவாகமாகாதோர் இந்நாட்டவர் பிறநாட்டவர் என்பன போன்ற பல புதிய அம்சங்கள் முன்னையவற்றைப் பார்க்க கூடுதலாகக் கொண்டே குடிசனமதிப்பீட்டைக் கவனித்தனர். இவ்வாண்டு இம்மதிப்பீட்டுக்குப் புகுத்தப்பட்டுள்ள கேள்வித்தொடர் அபிவிருத்தியடைந்துவரும் நாட்டின் பொருளாதாரத் திட்டங்களுக்கு நல்ல பல தகவல்களைத் திரட்டித் தருகின்றது.

## 'கம்பியூட்டர்'

மக்கள் கணக்கெடுப்பில் இம்முறை முதல்தடவையாக முன் இயக்க கம்பியூட்டர் யந்திரம் பயன்படுத்தப்படுகிறது இலங்கை வாழ் மக்கள் 120 லட்சம் பேரின் தரவுகளையும் சரியாக ஆராய்ந்து இவ்வியந்திரம் கணிக்கவுள்ளது. இந்த 120 லட்சம் மக்களின் விபரங்களையும் ஆட்கள் ஆராய்ந்து கணிப்பதென் கம்பியூட்டர் இந்த... பட்ட வயதுத் தொ... ஏற்க மறுத்துவிடும். ...யான விபரம் வரு... இது ஏற்றுக்கொள்ள... டாது. இவ்வாறே... வொருவரது ...களையும் விரிவாக ஆரா... தவறற்ற விபரங்களை... யூட்டர் வழங்கும்.

— டி. பி. குணரத்ன —

(தரவு முறை அதிபர்: குடிசன மதிப்பீட்டு, புள்ளி விபர இலாகா)

தொழில், மதம் ஆகியவற்றோடு இடம்பெறுகின்றன.

## காலனித்துவ ஆட்சியில்

இம்முறை இவ்வாறு கூடிய அம்சங்கள் இடம்பெற்றுள்ளமை நாட்டின் பொருளாதார சுபீட்சத்துக்கு ஏற்பட வேண்டிய மாற்றங்களை எடுத்துக்காட்டுகின்றன. 1871ல் இலங்கை காலனித்துவ நாடாகவிருந்தது இதனால் அப்பொழுது ஆண்ட அன்னியர்கள் தங்கள் நிர்வாகத்துக்கு ஏற்றவகையில் தொழில், வயது, பால்பாகுபாடு, மதம் போன்ற சில அம்சங்களை அடிப்படையாக மது கலபமான காரியமல்ல. ஆட்களை ஈடுபடுத்தினால் இக் கணிப்பு வேலைகளைப்பூர்த்தி செய்ய இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் பிடிக்கும். இக்காலப் பகுதிக்கிடையில் தரவுகள் காலங்கடந்தவையாகிவிடும்.

ஒவ்வொரு தனி நபரும் கொடுக்கும் தகவல்களை இவ்வியந்திரம் ஆராய்வதால் கூடிய சரியான விபரங்களைப் பெறக்கூடியதாகவிருக்கும். உதாரணமாகக் கணக்கெடுப்பாளர் ஒருவர் தவறுதலாக 5 வயதுப் பிள்ளையொன்றை விவாகம் செய்ததாகப் பதிந்திருந்தால்

## கேள்வித்தொடர்

மேலும் இம்மக்கள்... கெடுப்பில் இவ்... தயாரிக்கப் பட்டு... கேள்வித்தொடரும்... பீட்டின் ஒரு சிறந்த... யாகும். அதிகமாகவும்... மாகவும் அதேவே... சுருக்கமாகவும் ஒவ்... பிரஜையிடமும் இ... பூரண விபரங்க... திரட்டத்தக்க வ... இக்கேள்விப்பட்டியல்... விக்கப்பட்டுள்ளது.

குடிசனமதிப்பீட்டு... யின்படி அதற்குப்... பான அமைச்சர் (தற்... பிரதமர்) சமூக, பொ... தார குடியியல் நிலை... அறிய குடிசன மதி... எடுக்கவேண்டும் எ... வரையறுத்துக்கு முன்... தாரித்துள்ளார்.

## இடைக்கால வேலை

...த உக்... வு பி... ...பட்ட பின்னர் ... ஒருவருடகாலமா... கொள்ளப்பட்டவேலை... அனைவை அதனோடு ... புடையவர்களன்றி ... எவராலும் அறியமுடி... இக்கேள்விப் பட்டிய... ரிப்பதில் ஏற்பட்ட ... களோ எண்ணிலடங்...

---

### சிறுகாவியம்

பொ. கணபதிப்பிள்ளை

# அருணோதயம்

## அறவமுதி அறநெறி உரைத்தல்

தன்னுயிர்போல் மன்னுயிரைத் தாங்கி மிகப்பேணி
துன்னும் வினையறுக்கும் தூமணியை - எந்நாளும்
நெஞ்சத் திருத்திநிதம் நீள நினைப்பவர்க்கு
அஞ்ச வராதே அறி.

இல்லறமே நல்லறமா பேற்று நடப்பவரை
போல்லா வினைபெறவும் நாடாதே - அல்லாத
வாழா வழிமேவும் வன்குணத்தார் தம்மவரை
தாழா வினைசாரும் தான்.

நீதி வழிநின்றே நிதமும் வருபவரை
ஆதியரன் என்றுமே ஆதரிப்பான் - நீதியிலா
'மாந்தர் குடிவாழ்க்கை மண்ணின் குடம்போல
சாந்துணையுஞ் சஞ்சலமே தான்'.

சத்தியமே யென்றும் தமைக்காக்கும் என்றுணர்ந்த
நித்தமுமே சத்தியமே நெஞ்சிருத்தி - வைத்தவரை
அண்டும் துயரணுகா அன்றுமே பேரின்பம்
எங்கும் நிறைவுண் டிவர்க்கு.

மேட்டிமை யென்னுமந்த வேண்டா விடக்குணத்தை
திட்டாய் நினைத்துவருந் திண்ணியர்க்கு - நாட்டமுற
விண்ணில் இடமதிலே வேண்டும் பதிகைக்கும்
கண்ணும் திறந்துவைப்பர் காண்.

தூய்மைசேர் உள்ளம் துலங்கிடநின் றூர்மாட்டே
வாய்மையாம் தெய்வ மமைவுடனே - செய்மையற
தீவினை தீய்த்தும் இருவினை ஆக்கிவைத்தும்
ஆவது கூட்டும் அறி.

ஒருவரை யூறுசெய்யா வுத்தமருள் அந்த
திருவுரு வாகிநிற்குந் தெய்வம் - அருவுருவன்
என்றுமே வெய்தி இடர்போக்கி நின்றென்றும்
இன்புறவே வைப்பான் இசைந்து.

அயலார் தமைப்பேணி அன்புசெய்வார் தம்முள்
மயலார் பிணி தீர்க்கும் வள்ளல் - துயர்களைந்தே
இன்பம் பெருக்கி இனிதே யிருக்க வைத்து
துன்பம் துடைப்பான் துணி.

இரக்கம் பெரிதென்றே எண்ணி நடப்பவர்க்கு
உரக்கம் பிறிதொன்றும் உண்டோ - பரப்பொருளும்
எண்ணி இவர்தம்மை ஏற்றி இருத்தி வைக்கும்
கண்ணின் மணியெனக் காத்து.

ஒன்றே குலமும் ஒருவனே தெய்வமுமாம்
என்றே யறிந்துயர்ந்த இன்மக்கள் - என்றும்
திருவுடையார் உள்ளம் உடைத்தார் இவர்போல்
பெருமை உடைத் தாரியார் பேசு.

செய்தே சமாதானம் சேர்த்தொன் றிருக்கவைக்கும்
மெய்யான வாழ்வைப்பூ மீதிலுய்க்கும் - துய்யவர்கள்
மெய்ப்பொருளாம் சற்குருவின் மேன்மக்கட் ஆவார்
துய்ப்பார்பே ரின்ப சுகம். [காண்

பொய்யாம் வினைகளெலாம் பூப்புறத்தே
போயொழிய
மெய்யாம் நெறிகாட்டும் மேன்மையுற - மெய்யடியார்
எந்நாளும் வாழ்வர் இனிதே யவரிருக்கை
பொன்னுடும் போற்றும் புகழ்ந்து.

கற்பவை கற்றும் கருத்துறவே செய்துநின்றும்
உற்றவர்க்குந் தாமதனை ஓதிவைத்தும் - உற்றிருந்த
கற்றவர் தம்மைப்போல் காசினியில் யாருண்டு
நற்றவமே செய்தார் நனி.

நானே எனுமந்த நல்லரக்கன் தன்னெச்சம்
தானே உருவெடுத்த காவலர்கள் - வீணேஇக்
காசினியைத் தாக்கி மிகக்கெடுக்கும் உன்மத்தப்
பேசரிய பேய்க்கே பிறப்பு.

(தொடரும்)

---

# ★ ஒப்பந்தங்கள்

'ஒப்பந்தத்தினி உயிர்நாடி ஒன்றிய மனங்கள்
ஒரு கோடி
நிர்ப்பந்தங்கள் நினைக்கூடி நிறைவேற்றம்
தினக்கோடி
இப்பந்தங்கள் தனைமீறி இசையாவிட்டால்
உடன் ஏறி
ஒப்பந்த நிலை சென்றேறுடி செயல்படுத்தக்
கேள் மன்றோடி''

ஒப்பந்தம் என்ற சொல்லை 'ஒப்பு' - 'பந்தம்' என்ற இரு பிரிவுகளைக் கொண்டதாகக் கொள்ளலாம். ஒப்புதல் என்றால் ஒன்றிற்கு மேற்பட்ட பகுதியினர் ஒரு விடயத்தை ஒரே மனதுடன் ஏற்றுக்கொள்வதைக் குறிக்கும். அதாவது ஒரு சாரார் சொல்லால் அல்லது செயலால் வெளிப்படுத்திய கருத்தை இன்னொரு சாரார் அல்லது இன்னும் பல சாரார் முற்றாக என்றால் ஒருவித தடையுமின்றி வெளிப்படையாக அறியக் கூடியவகையில் மாற்றமுமின்றி ஏற்றால் குறித்த விடயத்தில் இருவருக்கும் இடையில் 'ஒப்பு' ஏற்பட்டுள்ளது எனலாம்.

## 'ஒப்பு' மட்டும் இருந்தால்....

ஆனால் 'ஒப்பு' மட்டும் இருந்தால் ஒப்பந்தம் ஏற்பட்டுவிடாது. இருவருக்குமோ இருவருக்கு மேற்பட்டவருக்கோ இடையில 'ஒப்பு' ஏற்பட்டு அந்த ஒப்பின்மூலம் இவர்களனைவரையும் கட்டுப்படுத்தக்கூடிய சட்டரீதியான கட்டுப்பாடு கடமை அல்லது 'பந்தம்' ஏற்பட்டால்தான் உண்மை ஒப்பந்தம் ஏற்படுகின்றது. இதனால்தான் ஆங்கிலச் சட்ட நிபுணர்கள் பலவரும் ஒப்பந்தத்திற்கு அளித்துள்ளனர்.

'A Contract is an agreement between two or more persons that can be legally enforced' இவ்வியாக்கியானம் பற்றியும் இதன் பொருள் விளக்கம் பற்றியும் பின்னர் ஆராய்வாம்.

நமது சட்டத்தைப்பற்றியும் அதில் எவ்வாறு ஒப்பந்தங்கள் இடம் பெற்றுள்ளன

★ நமது சட்டத்தின் பிரதான அம்சம்

★ அன்றாட வாழ்க்கையை நடாத்த இன்றியமையாதவை

என்பதைப்பற்றியும் முதலில் அறிதல் நன்மை பயப்பதாகும். நமது அன்றாட வாழ்க்கையில் நாம் அனைவரும் ஒவ்வொரு நாளும் மற்றவர்களுடன் பழகும்போது எத்தனையோ ஒப்பந்தங்களைச்செய்து, அவற்றை ஒருவித பிரச்சினையுமின்றி நிறைவேற்றி வருகின்றோம். நாம் ஒப்பந்தம் செய்கிறோம் என்ற எண்ணமே இல்லாமல் எத்தனையோ ஒப்பந்தங்களில் ஈடுபட்டுநிறைவேற்றி வருகிறோம்-இதுவே சாதாரண வாழ்க்கை. சட்டப் பிரச்சினை எழுவது புறம்பு.

ஒருவர் சர்பத்கடைக்குச் சென்று 50 சதத்தைக் கொடுத்து ஒரு போத்தல் சர்பத் தரும்படி கேட்கிறார். கடைக்காரரோ சர்பத் ஒரு கிளாஸ் 70 சதம் எனக்கூறுகிறார். இங்கு இவ்விருவருக்குமிடையில் 'ஒப்பு' ஏற்படவில்லை. ஒரு கிளாஸ் சர்பத் 70 சதமெனக் கூறியதில் இருந்து 50 சதத்துக்குத்தரமுடியாதென்பதைக் கடைக்காரர் தெளிவுபடுத்தி விட்டார். அத்துடன் '70 சதம் தருவீர்களானால் ஒரு கிளாஸ் சர்பத் நான் தர ஆயத்தம்' என்ற தன் கருத்தினையும் வந்தவருக்கு விளக்கிவிட்டார் கடைக்காரர். வந்தவர் தாகமிகுதி ஏற்படவே போனால் போகட்டும் என நினைத்து மிகுதி 20 சதத்தையும் நீட்டுகிறார், இவ்விடத்தில் இருவர் மனதிலும் முழுதான 'ஒப்பு' ஏற்பட்டுள்ளது. ஒப்பந்தம் நிறைவேறியுள்ளது: தத்தம் கடமைகள் செயல்படுத்தப்பட்டு இரு சாரார்களின் உடன்பிரச்சினைகளும் தீர்ந்தது.

## 'பந்தம்'

இங்ஙனம் முற்றுஏற்பட்ட இந்த ஒப்பந்தத்தில் ஒப்பு ஏற்பட்டதை மட்டும் கவனித்தோம். ஆனால் ஒப்பந்தத்திற்கு இன்றியமை... அ...ங்களும்... ...க என... ...வ ர... விவரமாம். இது ... வேண்டிய விளைவே. உடன் 'பந்தம்' ... ஒப்பந்தம் ஏற்படமுடி... குறித்த ஒப்பந்தம் ... யின்றி செயல்பட்டு ... டைந்ததால் பந்தம்' ... அம்சத்தில் நாம் கவ... டம் செலுத்தவில்லை.

மேற்படி சம்ப... 80 சதம் தருவதாக ... கேட்டவர் கூறியது... றாக இருவரும் ஒ... முடையவராய் விட்... எழக்கூடிய கடைசி ... தியாசம் நீங்கியி... ஆகவே அக்கணமே ... ருக்குமிடையில் நமது... முறைப்படி ஒப்பந்த... வாகச் சட்டரீதியா... பட்டுவிட்டது. ஏ... 'ஒப்பு' சட்டத்தி... விரோதமின்றிசட்டரீ... இருப்பின் அதக்... 'பந்தமும்' ஏற்பட்டு... றது. ஏனெனில்இந்த... தின்தான் கடைக்... 70 சதத்தைப் பெ... கொண்டு ஒருகிளாஸ் ... தைக் கொடுக்கக் கட... பட்டுள்ளார். அதே... வந்தவரும் அதேகண... ஒரு கிளாஸ் சர்ப... பெற்றுக்கொண்டு 70... தைக் கொடுக்கக் கட... பட்டுள்ளார். இ... மாறாக வந்தவர் '... இவ்விலைக்குச் சர்பத்... டேம் எனக் கூறியிரு... ஒப்பந்தம் இருவ... இடையில் ஏற்பட... மாட்டாது. அப்போ... இல்லாமல் போயிரு... எனவே சட்டரீதியா... கமும்" இவர்களுக்கி...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ..குடிசன மதிப்பீடு

கம்பியூட்டர் இந்த மாறு பட்ட வயதுத் தொடர்பை ஏற்க மறுத்துவிடும். சரியான விபரம் வரும்வரை இதை ஏற்றுக்கொள்ளமாட்டாது. இவ்வாறே ஒவ்வொருவரது விபரங்களையும் விரிவாக ஆராய்ந்துவிடும் தவறற்ற விபரங்களைக் கம்பூட்டர் வழங்கும்.

### கேள்வித்தொடர்

மேலும் இம்மக்கள் கணக்கெடுப்பில் இவ்வாண்டு தயாரிக்கப் பட்டிருக்கும் கேள்வித்தொடரும் மதிப்பீட்டின் ஒரு சிறந்த முறையாகும். துரிதமாகவும், விபரமாகவும் அதேவேளையில் சுருக்கமாகவும் ஒவ்வொரு பிரஜையிடமும் இருந்து பூரண விபரங்களைத் திரட்டத்தக்க வகையில் இக்கேள்விப்பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது.

குடிசனமதிப்பீட்டு விதியின்படி அதற்குப்பொறுப்பான அமைச்சர் (தற்போது பிரதமர்) சமூக, பொருளாதார குடியியல் நிலைமைகளை அறிய குடிசன மதிப்பீடு எடுக்கவேண்டும் என ஒரு வருடத்துக்கு முன்பே உத்தரவிடுவார்.

### இடைக்கால வேலைகள்

..த உத்தரவு பிறப்பிக்கப்பட்ட பின்னர் கடந்த ஒருவருட காலமாக மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் அளவை அதனோடு தொடர்புடையவர்களன்றி வேறு எவராலும் அறியமுடியாது. இக்கேள்விப் பட்டியல் தயாரிப்பதில் ஏற்பட்ட கஷ்டங்களோ எண்ணிலடங்கா. சம..

..ந்தப்பட்ட ஒவ்வொருவரது விருப்பையும் நோக்கையும் பூர்த்திசெய்வதென்பது இயலக்கூடியகாரியமா? இதைத் தயாரிக்க செலவும் அதிகம் பிடித்தது. இது தயாரிக்கப்பட்டதும் முதலில் பரீட்சார்த்தமாக நடாத்தப்பட்டது. பல தடவைகள் திருத்தங்கள், மாற்றங்கள்செய்யப்பட்டே தற்போதைய பூரணவடிவை இக்கேள்வித் தொடர் பெற்றுள்ளது.

இதற்கிடையில்ஒவ்வொரு இல்லங்களுக்கும் இலக்கங்கள் வழங்கல், வீடுகளின் விபரங்கள் முதலியன இவ்..

..கள் நாட்டின் பலபகுதிகளுக்கும் சென்று குடிசன மதிப்பீட்டில் ஈடுபட்டுள்ள ஊழியர்களுக்கு பயிற்சி வகுப்புகளும் நடாத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்மதிப்பீட்டு வேலைகளுக்கு 50,000 ஊழியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர் 60 லட்சம் ரூபா இவ்வேலைகளுக்காகச் செலவிடப்பட்டுள்ளது

இம்மாதம் 20-ம்திகதியில் இருந்து 30 வரை நடைபெறும் குடிசன மதிப்பீட்டின் ஆரம்பவேலைகள்யாவும் பூர்த்தியாகி இறுதிமதிப்பீடு அடுத்த மாதம் 9-ம் திகதி..

# அன்றும் இன்றும்: ஒருகண்ணோட்டம்

வருடம் மார்ச் மாதம் மேற்கொள்ளப்பட்டது.

தற்போது குடிசனமதிப்பீட்டு பத்திரங்கள் நாட்டின் மூலைமுடுக்குகள்எங்கும் விநியோகிக்கப்பட்டுள்ள தோடுமக்கள் கணக்கெடுப்பு அதிகாரிகள் இல்லங்கள் தோறும் சென்று ஒருவரையும் தவறவிடாத சகலவிபரங்களையும் திரட்டுகின்றனர்.

இதற்கு முன்னர் குடிசன மதிப்பீட்டு இலாகா அதிகாரி..

..மாலை 6 மணிக்கும் நள்ளிரவு 12 மணிக்கும் இடையில் நடைபெறும். அன்றைய தினம் கணக்கெடுப்பாளர்கள் தாங்கள் ஏற்கனவே சேகரித்த விபரங்களைச் சரிபார்ப்பர். இத்தினம் குடிசன மதிப்பீட்டின் முக்கியமான தினமாகும்.

ஒரு நாட்டின் பிரதான மூலப் பொருள் ஜனத்தொகை. இது பற்றிய விரிவான தகவல்களிலேயே

(11-ம் பக்கம் பார்க்க)

# ..ங்கள் ★

ராஜ ராஜேஸ்வரன் தங்கராஜா
(நியாயவாதி, பலாலி கனிஷ்ட பங்கலைக் கழக முன்னைநாள் சட்ட விரிவுரையாளர்)

..தற்கு ..றியமையாத ..வையும் ..கிய 'பந்தம்' ..வரா வது ..வேண்டும். இது வினவ வேண்டிய வினவே. 'ஒப்பு' உடன் 'பந்தம்' சேராது ஒப்பந்தம் ஏற்படமுடியாது. குறித்த ஒப்பந்தம் பிரச்னையின்றி செயல்பட்டு முற்றடைந்தால் பந்தம்' என்ற அம்சத்தில் நாம் கண்ணோட்டம் செலுத்தவில்லை.

மேற்படி சம்பவத்தில் 20 சதம் தருவதாக சர்பத் கேட்டவர் கூறியதும் முற்றாக இருவரும் ஒரே மனமுடையவராய் விட்டனர். எழக்கூடிய கடைசி மனவித்தியாசம் நீங்கிவிட்டது. ஆகவே அக்கணமே இருவருக்குமிடையில் நமது சட்ட முறைப்படி ஒப்பந்தம் தெளிவாகச் சட்ட ரீதியாக ஏற்பட்டுவிட்டது. ஏற்பட்ட 'ஒப்பு' சட்டத்திற்கு விரோதமின்றிசட்டரீதியாக இருப்பின் அந்தக்கணமே 'பந்தமும்' ஏற்பட்டுவிடுகின்றது. ஏனெனில்இத்தருணத்தில்தான் கடைக்காரர் 70 சதத்தைப் பெற்றுக்கொண்டு ஒருகிளாஸ் சர்பத்தைக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளார். அதேபோல் வந்தவரும் அதேகணம்தான் ஒரு கிளாஸ் சர்பத்தைப் பெற்றுக்கொண்டு 70 சதத்தைக் கொடுக்கக் கடமைப்பட்டுள்ளார். இதற்கு மாறாக வந்தவர் 'எனக்கு இவ்விலைக்குச் சர்பத் வேண்டாம் எனக் கூறியிருந்தால் ஒப்பந்தம் இருவருக்கும் இடையில் ஏற்பட்டிருக்கமாட்டாது. அப்போ 'ஒப்பு' இல்லாமல் போயிருக்கும். எனவே சட்டரீதியான 'பந்தமும்' இவர்களுக்கிடையே

எழுந்திருக்க முடியாமலிருந்திருக்கும்.

'இந்த உதாரணத்தில் ஒப்பு ஏற்பட்டவுடன் பந்தமும் ஏற்பட்டதைக் கவனித்தோம்.

எனினும் ஒப்பு ஏற்பட்டால் கட்டாயமாகப் பந்தமும் ஏற்படவேண்டும் என்ற நியதியில்லை. உதாரணமாக ஒருவர் இன்னொருவருக்கு இந்தியாவிலிருந்து கள்ளக்கடத்தல்மூலம் பொருள் கொண்டுவர மனங்கள் ஒப்பினும் அது சட்டத்திற்கு விரோதமான செய்கையெனக் கொள்ளப்படுவதால் இரு சாராருக்கும் இடையில் சட்டரீதியான பந்தத்தை உருவாக்க முடியாது. இச்சந்தர்ப்பத்திலே 'ஒப்பு' இருந்தும் 'பந்தம்' இல்லாத காரணத்தால் சட்டரீதியான ஒப்பந்தம் ஏற்படமுடியாது. இதே மாதிரி உண்மையில் செய்ய முடியாத காரியத்தைச் செய்ய இருசாராரும் ஒப்புச் செய்தாலும் இருசாராருக்குமிடையில் 'பந்தம்' ஏற்படுக்காது. எனவே இவை ஒருபோதும் சட்டரீதியான ஒப்பந்தமாக ஏற்றுக்கொள்ளமுடியாது. உண்மை 'ஒப்பு' ஏற்பட்ட எந்த எந்தச் சந்தர்ப்பங்களில் சட்டரீதியான 'பந்தம்' ஏற்படலாம் என ஆராய்வதுதான் ஒப்பந்தச் சட்டமாகும் என்றும் கூறலாம். எனவே


'ஒப்பு' ஏற்பட்ட ஒவ்வொரு தருணமும் சட்டரீதியான 'பந்தமும்' ஏற்படுதல் அவசியமில்லையென் பதை தமக்கும் நாம் தற்போது அறிந்திருந்தால் போதுமானதாகும்.

நாம் முன்னர் கூறியது போல் ஒப்பந்தங்களில் இரு சாராரும் தமக்குத் தமக்கு ஏற்படுகின்ற நிர்ப்பந்தங்களைச் சரிவரச் செய்து முடித்தால் ஒப்பந்தம் நிறைவேற்றப்பட்டு முற்றடைந்ததாகக் கொள்ளப்படும்.

### சாதாரண வாழ்க்கையில்

சாதாரண வாழ்க்கையில் ஒப்பந்தங்கள் பிரச்னையில்லாமல் நிறைவேறுவதுதான் வழக்கம். எத்தனையோ கோடிக்கணக்கான ஒப்பந்தங்கள் ஒவ்வொரு நாளும் நிறைவேறுகின்றன. இங்ஙனம் நிறைவேறாவிடில் யாராவது ஒருசாரார் ஒப்பந்தங்களின் மூலம் தான் செய்ய ஒப்புக்கொண்ட நிர்ப்பந்தங்களைச் செய்யத் தவறினால் அல்லது சரிவரச் செய்யாவிட்டால் மற்றைய சாரார் குறைகாணுவது நியாயமே. உதாரணமாக நாம் சட்ட நுணுக்கப்படி ஆராய்ந்தால் எழுபது சதத்தைப் பெற்ற கடைக்காரன் சர்பத்தைக் கொடுக்க மறுத்தால் அது அவன் தவறாகும்; அல்லாவிட்டால் சர்பத்கேட்டவர்ஒருகிளாஸ் சர்பத்தைப் பெற்றுக்கொண்டு தான் கொடுக்கச் சம்மதித்த எழுபது சதத்தைக் கொடுக்காவிட்டால் அதுவும் தவறாகும்.

10-ம் பக்கம் பார்க்க




(30)

பொழுது நன்றாக விடிந்த பிறகு, வீட்டின்பின் பக்கமுள்ள இடங்களைப் பார்த்தேன். என்னகத்தின்படி. இந்தப்பணம் எல்லாம் குவிகிறதற்கு முன்னே பெரியையாவின் உள்ளத்திலே நிம்மதி இருந்திருக்கும். வீட்டிலேயும் மகிழ்ச்சி மலர்ந்து வரிமலித்திருக்கும். அதுபோலவே, அந்த நிலைக்கேற்ப. இந்தப் பின்பக்கத்திலே முன்னெருபோது அழகிய பூந்தோட்டம் ஒன்று இருந்திருக்கவேண்டும். சிமந்தினால் கட்டியிருந்த பூந்தொட்டிகளும், அங்கொன்றும் இங்கொன்றுமாய் வளர்ச்சி குன்றிக்கிடந்த ரோஜாச்செடிகளும் அந்த இடத்தின் பழங்கதையைச் சொல்லி நின்றன.

சாய்ப்புக்கிடந்த இடம், எனக்குப் பெரியையாவின் வாழ்க்கையைச் சுட்டிக் காட்டிநின்றது,

இந்த இடத்தைத் திருத்தி அழகின்சிரமான பூந்தோட்டத்தை ஆக்கலாம் என்ற எண்ணம். நம்பிக்கை, சக்தி எல்லாம் என்னுள் இருந்தன.

ஆனால்—

''பெரியம்மா கூப்பிடுறா!''

நிமிர்ந்து பாராமலே, அங்கே சிவகாமி நிற்கிறதைக் காணுகிறேன். 'கூப்பிடுறா' என்ற சொல்லிலே பிறந்த அழுத்தம், அர்த்தநிறைவோடு இருந்ததாய்எனக்குப் பட்டது.

''பெரியையா! நான் என்ன செய்ய?''

சிவகாமி என்னைத் திரும்பித் திரும்பிப் பார்த்துக் கொண்டே போகிறாள். நானும் உள்ளே, கூடவே சென்றேன்.

நேரங்கழித்துத் திரும்பிச் சென்று ''டாக்குத்தர் கண்டிக்குப் போயிட்டாராம்'', என்றபோது, அவள், பெரியம்மா, உள்ளே துடித்த துடிப்பு!

அவள் படுக்கையிலிருந்து எழுந்து கண்ணாடியின் முன் சென்று தன்னைப் பார்த்துக் கொண்டாள். கண்ணாடியில் தெரிந்த அந்த முகத்திலே, 'மேக்கப்' பசைகளுக்கு மேலே, ஏமாற்றமும் பூசிக்கிடப்பது தெரிந்தது.

அவளும் கண்ணாடியுள் என்னைப் பார்க்கையில், நான் நழுவிவிட்டேன்.

சாப்பாடு. சாப்பாடு போலவே தோற்றவில்லை. பொய்மையும் அழுக்கையும் வாரிப்போட்டு விழுங்குகிற மாதிரி ஓர் உணர்ச்சி. என்னை நானே வெறுத்துக் கொள்ளுகிறநிலை.

தட்டைக்கொட்டிக் கழுவி விட்டுத்திரும்புகிறேன். சிவகாமி பாலை நீட்டுகிறாள்.

''வேண்டாம். எனக்கு வயிறு சரியில்லை'':

''ஆ!''

அவள் தொண்டைக் குழியுள் திணறிப்பிறந்த இந்த ஒலியில் நான் திடுக்கிட்டு, அவளைத் திரும்பிப் பார்த்தேன்.

இவள் முகத்திலேயும் ஏமாற்றம் ஒன்று பெருமளவிற் பரவிக்கிடந்தது. ஆனால் அங்கே எழுதிக்கிடந்த ஏமாற்றத்துக்கும், இங்கே பரவிய ஏமாற்றத்துக்குமிடையில் இருந்த வித்தியாசத்தை என்மனம் பூரணமாகக் காணுகிறது.

அன்று முழுவதும் ஆயுதங்களோடு நான் பின் காணியுள் பற்றை, செடி, கொடிகளோடு போராடிக்கொண்டிருந்தேன்.

மாலையில், விளக்கேற்றுகிற நேரம். சொல்லி வைத்தாற்போல, கைப்பைகளைக், 'கண்டிக்குப் போயிருந்த' டாக்குத்தர் அங்கேவந்திறங்கினார்;

என் உணர்வுகளெல்லாம் உள்ளடங்கி ஒளித்துக் கொள்ள, நானும் உள்ளே சென்று என்னை மறைத்துக் கொண்டேன். உள்மனத்தில் பயங்கரமொன்று வேர்விரைச்சலோடு வட்டமிடத் தொடங்கிற்று.

இரவுச் சாப்பாட்டுக்கே போகாமல் அறையை இருளாக்கிவிட்டு, நான் உள்ளே உள்ளடங்கிக் கிடந்தேன். நேரத்தின் அதிகரிப்போடு என்னுள்ளே பயங்கரமும் அதிகரித்துக் கொண்டிருந்தது.

அரவமின்றி யாரோ என் அறைப் பின்வாசல்வரை எட்டிப்பார்க்கிறார்கள். என்னுள்ளே ஊசிகள் குத்துகின்றன மயிர்க்கால்கள்தோறும் வியர்வை அரும்புகிறது.

இரண்டுமணி நேரமாக இருளை ஊடுருவிய கண்கள், ஒருகணத் திகைப்பின் பின்னர், அறைவாசலில் சிவ..

..காமியைக் காணுகின்றன. அவள் பார்த்துவிட்டுப் போகட்டும் என்று நான் சும்மா கிடக்கிறேன்.

சிவகாமி உள்ளே அடி வைத்து வந்து 'சுவிச்'சைப் போடக் கையை உயர்த்துகிறாள்.

''ஸ். போடவேண்டாம்.''

கை அந்தரத்திலேயே நின்றுவிட, அதிர்ச்சியடைந்தவளாய்ச் சிவகாமி திரும்பிப் பார்த்தாள்.

நான் மெதுவாக எழுந்து, கிட்டப்போய், ''எனக்குப் பசியில்லை. சாப்பாடு வேண்டாம். நீ சத்தமில்லாமைப் போய்விடு'' என்கிறேன்.

என் குரல் காற்றாகவே இருந்தது. அதிலிருந்த நடுக்கம் அவளையும் நடுங்கவைத்தது. மூச்சை அடக்கிக் கொண்டு நுனிக்கால்களால் நடந்து அவள் வெளியேறினாள்.

நான் பிறகு தூங்கிவிட்டதோ, டாக்குத்தர் போனதோ எனக்குத்தெரியாது.

இரண்டுதினம் கழிந்தது. பெரியையா வந்த பிறகுதான். நான் ஓரளவு வெளியில் நடமாடினேன். அவரும் என்னை எதுவுமே கேட்கவில்லை.

சின்னம்மாக்கள் இடைக்கிடை வந்து போனார்கள். விடுமுறைகளின் போது நீண்டநாட்கள் தங்கிவிட்ட போதும். அவர்கள் ஏதோ படிப்பு படிப்பு என்று புத்தகங்களிலே மூழ்கியிருந்த காரணத்தால், அமைதியே நிலவிற்று.

எனக்கும் பெரியம்மாவுக்குமிடையே எந்தவித சந்திப்பும் நிகழாமல் நாள் நடத்துகொண்டேன். அவளும் வேண்டுமென்றே, என் சேவைகளை ஒதுக்கிவிட்டிருக்கவேண்டும்.

பெரியையா சுமத்துக்குப் போய் வந்து கொண்டிருந்தார். ஏதோ நாவலுக்குப் புத்தகங்களை எனக்கு அனுப்பிவிட்டிருந்தார். ''சும்மா இராமல் ஏதும்படி'' என்று முடுக்கினார்.

பின்வளவில் அழகான ஒரு பூந்தோட்டம் உருவாகிக் கொண்டிருந்தது. பெரியையா தருகிற சம்பளப் பணமும் என் பெட்டியினுள் பெருகிக்கொண்டுவந்தது.

(வளரும்)

# பாவம் புளூட்டோ கிரகம்

சூரியகுடும்பத்தின் வெளிப்புறவட்டமான புளூட்டோவின் எடை வானவியலாளருக்கு ஒரு வியப்பை உண்டாக்கியுள்ளது. புளூட்டோவின் எடை படிப்படியாகக் குறைந்து வருவதே இந்த வியப்பிற்குக் காரணம். கடந்த 10 வருடங்களில் காணப்பட்ட தேர்வு எதுவித மாற்றமுமின்றித் தொடருமாயின் ஏறத்தாழ 1980-ம் ஆண்டளவில் புளூட்டோ கிரகம் எதுவித அறிகுறியுமின்றி மறைந்துவிடும். 10 வருடங்களுக்குமுன் புளூட்டோவின் எடை பூமியின் எடைக்கு சமனாக இருந்தது அமெரிக்க கடற்படை வான்நோக்கு கூடத்தினரால் அண்மையில் வெளியிடப்பட்ட கணிப்புகளின்படி புளூட்டோவின் எடை இப்போது பூமியின்எடையில் 0·11 பகுதியே இருக்கிறது.

யூரேனஸ், நெப்டியூன் ஆகிய கிரகங்கள் பூமியைவிட 15 மடங்கு எடைகொண்டவை. ஆனால் அவற்றின் சுற்றுப்பாதை இன்னமும் முடிவாகக் கணிக்கப்படவில்லை. இந்நிலையில் புளூட்டோவின் எடையைக்கணிப்பதில்சிரமம் அதிகம். ஆனால் புளூட்டோவின் எடை குறைந்து வருவது உண்மையே. எடையில் மிகக் குறைவான கிரகம் சூரியனைவிட்டு இவ்வளவு தொலைவில் இருப்பது வியப்பிற்குரியதாகும். புளூட்டோ ஒருதனிக் கிரகமாக இல்லாது ஒருகாலத்தில் நெப்டியூனின் உபகிரகமாய் இருந்துபின்னர் விடுபட்டு தனிப் பாதையில் செல்லுவதாக இருக்கலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடலுக்கும் உள்ளத்துக்கும் சிறப்பைத்தரும் விவசாயத்தொழிலை விடுத்து நம் இளைஞர் சமுதாயம் கைகட்டி, வாய்பொத்தி வேலை பார்க்க ஆசைப்படுவதேனோ?

உடலுக்கு உத்வேகத்தையும் உள்ளத்துக்கு உற்சாகத்தையும் அளிக்கும் விவசாயம், கைத்தொழில் ஆகியவற்றின் மேன்மையை உணர்ந்தால் உத்தியோகத்தை யாரும் விரும்பமாட்டார்கள்.

### மாணவர்களுக்கு விவசாயம், கைத்தொழில்


# வித்திட்டு விளைச்சல் பெறுவோம்!

— செல்வன் கா. சிவநேசன், யாழ். மத்திய கல்லூரி —

### உத்தியோக மோகம்

மக்கள் அறிவாற்றல் மிக்கவராக விளங்கவேண்டுமென்பதற்காக நம்நாட்டில் இலவசக்கல்வி ஏற்படுத்தப்பட்டது. ஆனால் பெற்றோர்கள் தம்பிள்ளைகள் எப்படியாவது எஸ். எஸ். ஸியோ, ஜி. ஸி. ஈயோ பாஸாகிவிட்டால் அரசாங்கத்தில் உத்தியோகம் பார்த்து கைநிறையப் பணம் சம்பாதிப்பார்கள் என்ற ஒரே நோக்கத்தை எதிர்பார்த்தார்கள். ஆனால் இந்தப்படிப்பு மாணவர்களுக்கு எதுவித தொழிலையும் கற்பித்துக் கொடுக்கவில்லை. அதனால் அவ்வளவுபேருக்கும் அரசாங்கத்தில் உத்தியோகம் பெறமுடியுமா? அதன் பலன் படித்த வாலிபர்க்கு வேலையில்லை. வேலையற்றோர் தொகை கூடிக்கொண்டே வந்துள்ளது.

இந்தநிலை எங்களுடைய எதிர்காலத்திலும் ஏற்படக்கூடாது; ஏற்படவிடமாட்டோம் என மாணவர்களாகிய நாம் உறுதிபூண்டோமானால் வேலையில்லாப் பிரச்சினை எதிர்காலத்தில் தலையெடுக்காது. அதற்கு இன்றே நாம் தொழிற்கல்வியில் பயிற்சிபெறவேண்டும். ஏட்டுக் கல்வி எமது அறிவாற்றலை விருத்திசெய்யுமேதவிர ஏட்டுக் கல்வியை நம்பி வாழ நாம் முற்படக் கூடாது.



### தொழிற்கல்வி

அரசாங்கம் இதை நன்கு உணர்ந்துள்ளது. அதனால் கல்விமுறையில் தற்போது மாற்றம் ஏற்படவுள்ளது. தொழிற்கல்வி சகல பாடசாலைகளிலும் கற்பிக்கப்பட்டு வருகின்றது. மாணவர்களாகிய நாம் எல்லோரும் தொழிற்கல்வியைவிரும்பிக் கற்கவேண்டும். நமது கவலையை ஒழிக்க ஏட்டுக் கல்வியோடு கைத்தொழில் ஒன்றையும் கற்றுக்கொள்வோம்.

விவசாயம், கைத்தொழில் ஆகியவற்றினால் தனி மனிதன் பொருள்வளம் பெற முடியும். அப்படியே ஒவ்வொரு மனிதனும் பொருள் வளத்தைப் பெருக்க நாடே பொருள்வளம்மிக்க நாடாக செழிப்புற்றுத் திகழும்.

பிறநாடுகளைப் பாருங்கள்! அமெரிக்காவில் கோதுமை, பருத்தி, கரும்பு என்பன பெருமளவில் உற்பத்திசெய்யப்படுகின்றன. இரும்பு, உருக்கு என்பவற்றைப் பயன்படுத்தி பல பொருட்கள் கைத்தொழில்ரீதியாகத் தயாரிக்கப்படுகின்றன. ரஷ்யா, சீனாபோன்ற நாடுகள் தமது விடாமுயற்சியினாலும், தன்னம்பிக்கையினாலும் தொழில் வளத்தைப் பெருக்குவதில் முன்னணியில் நிற்கின்றன.

இன்று இலங்கையிலே ஏற்பட்டுள்ள பொருளாதாரக் குறைவுக்கு, பொருள் வளச் செறிவின்மைக்குக் காரணம் நாம் விவசாயம், கைத்தொழில் ஆகியவற்றை மேலும் வளர்த்துக்கொள்ளாமையேயாகும். எனவே மாணவர்களாகிய நம்முடைய எதிர்காலம் செழிப்புற்று விளங்க இன்றைக்கே வித்திடுவோமாக.

# மா ண வ ர் ம ல ர்

## சமய அறிவுப் போட்டி

கேள்வி: அருணகிரிநாதரின் அவதார காரணம் என்ன?

விடை: சைவ, வைஷ்ணவ, சாக்கிய சமயப் பூசல் ஒழித்து சமரசம் காணவே அவர் அவதரித்தார்.

கேள்வி: சுந்தரமூர்த்தி நாயனார் பாடிய அடியார் எத்தனை பேர்?

விடை: அறுபது பேர் (60)

கே: திருக்கோவிலில் வீதிகளைப் பெருக்கிச் சுத்தம் செய்தல், மெழுகுதல் முதலியன செய்வது சிவபுண்ணியம் என்பதைக் கூறும் தேவாரப் பாடல் ஒன்றை எழுதுக?

விடை:

"நிலைபெறுமா றெண்ணு
 தியேல் நெஞ்சே நீவா
நித்தலு மெம் பிரானு
 டைய கோயில் புக்குப்
புலர்வதன் முன் அலகிட்டு
 மெழுக்கும் இட்டுப்
பூமாலை புனைந்தேத்திப்
 புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக்
 கூத்தும் ஆடிச்
சங்கரா சய சய போற்றி
 போற்றி என்றும்
அலைபுனல் சேர் செஞ்சடை
 யெம் ஆதீ என்றும்
ஆரூரா என்றென்றே
 அலறா நில்லே"

கே: சிவனுக்கும் முருகனுக்கும் பேதமில்லை என்பதை விளக்கப் புராணப் பாடல் மேற்கோள் ஒன்று தருக?

விடை:

"அருவமு முருவுமாகி
 அநாதியாய்ப் பலவா
 யொன்றாய்ப்
பிரமமாய் நின்ற சோதிப்
 பிழம்பதோர் மேனி
 யாகக்
கருணைகூர் முகங்களாறுங்
 கரங்கள் பன்னிரண்டுங்
 கொண்டே
ஒருதிரு முருகன் வந்தாங்
 குதித்தனன் உலகமுய்ய"

பின்வரும் கந்தபுராணப் பாடல்களாலும் அறியலாம்:

அ. ஈசனே யவனாடலால்
 மதலையாயினன் காண்...

ஆ. ஆதலினமது சக்தி
 ஆறுமுகனவனும்
 யாமும்...

இ. ஊறிலான் குணங் குறி
 யிலான் செயலிலா னு
 ரைக்கும்......

ஈ. உலைப்படு மெழுக
 தென்ன உருகியே
 ஒருத்தி காதல்......

கே: திராவிடன் என்பதன் பொருளை விளக்குக?

விடை: திராவிடன் என்பது திரௌ×சம் என்று பிரியபடும். திரௌ என்பது மரத்தின்கீழ் என்றும், சம் என்பது வணங்குதல் என்றும் பொருள்படும். ஆகவே "மரத்தின்கீழ் வணங்குபவன்" என்பது திராவிடன் என்பதன் பொருளாகும்.

கேள்வி:

"பழம் பாக்கு வெற்றிலை,
 பச்சரிசி தேங்காய்
இளநீர் தேனேற்றி
 வெழிலார்—அளவிலா
மங்கையொடு வாடவரு மக்கு
 நல்லூர்த் தேரடியில்
எங்குருவைக் கண்
 டேனிது"

இப்படி பாடலைப் பாடியவர் யார்?

விடை: கொழும்புத்துறை யோகர் சுவாமிகள்

கே: தேர்த்திருவிழா அழித்தலைக் குறிக்கும். வாகனத் திருவிழா எதனைக் குறிக்கும்?

விடை: வாகனத்திருவிழாக்கள் காத்தலைக் குறிக்கும்.

கே: தேரில் ஆனைத் தொட்டிப்பார் என்பது என்ன?

விடை: விக்கிரக வரிசையிற் சில விக்கிரகங்கள் வெளியே நன்கு புலப்படக் கூடியனவாக வைக்கப்பட்டும், சில சிறிது உள்ளே தள்ளி வைக்கப்பட்டுமிருப்பதைக் காணலாம். இவ்வாறு விக்கிரகங்கள் அமைப்பதற்கு ஆதாரமாயிருப்பது ஆனைத் தொட்டிப்பார்.

(தொடரும்)

## அம்மா

— நெடுந்தீவு லக்ஸ்மன் —

அம்மா நல்ல அம்மா
 அன்பாய் முத்தம் தந்திடுவாள்
சும்மா தூக்கி மடியிருத்திச்
 சுவையாய்க் கதைகள் சொல்லிடுவாள்

தொட்டில் கட்டித் தாலாட்டித்
 தூங்க வைத்தே விழித்திருப்பாள்
மட்டிலாத கனவுகளில்
 மகவெம் வாழ்வின் வளம் காண்பாள்

பாலும் பழமும் தந்தன்பாய்
 பள்ளிக் கனுப்பி வைத்தவளே
நாலும் தெரிந்த பெரியோராய்
 நன்றே வாழச் செய்திடுவாள்

கண்ணைக் காக்கும் இமைபோன்று
 கண்ணாய் எம்மைக் காத்திடுமெம்
அன்னை அவளின் அன்புக்கு
 அகிலத்தில் ஈடே உண்டு?

அந்தோ அம்புலி ஆ...ஆ...ஆ...
 அச்சா ஒருக்கால் என்றன்பாய்த்
தந்தே யமுது அமிழூட்டும்
 தாயை நாளும் வணங்கிடுவோம்.

## உண்ணத் தகுந்த செய்திகள்!

செய்தித் தாள்களில் படிக்கும் செய்திகளைச் சுவையானவை என்கிறோம். சிலவற்றை 'இது என்ன காரசாரமற்றது. சப்பென்று இருக்கிறது' என்கிறோம். ஆனால் இச்செய்திகளையும் தின்று சுவைக்கத்தக்க வகையில் விஞ்ஞானிகள் செய்திருக்கிறார்கள்.

"உண்பதற்குத் தகுதியான செய்தியா என ஆச்சரியப்படுகிறீர்களா?" மேரிலாந்து மாநிலத்தின் பெல்ட்ஸ்வில் நகரில் இருக்கிறது அமெரிக்க அரசு வேளாண்மைத்துறையின் ஆராய்ச்சி நிலையம். இங்கு பணியாற்றும் விஞ்ஞானிகள் ஓர் உண்மையைக் கண்டுபிடித்துள்ளனர். மண்ணை கால்நடைகளுக்குப் பழைய செய்தித் தாள்களைத் தீவனமாகக் கொடுக்கலாம் என்பது அவர்களுடைய புதிய கண்டுபிடிப்பு.

கால்நடைகளை ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞானி டேவிட் டிவியஸ் ஒரு கோட்பாட்டினை அவர் சோதித்ததன் விளைவு... கால்நடையின் உணவிலே சில தீவனப் பொருள்களுக்குப் பதில் நியூஸ் பிரின்ட் தாளைப் பயன்படுத்தலாம் என்று கண்டுகொண்டனர். மனிதன் உண்ண முடியாத பல பொருட்களைக் கால்நடைகளுக்குத் திறம்படப் பயன்படுத்த முடியும் என்பதுதான் டிவியஸ் கோட்பாடு.

நியூஸ்பிரின்ட் தாளும் [illegible] வைக்கோலுக்குப் பதிலாகக் கொடுக்க முடியுமா என்று அறிய ஒரு சோதனை நடத்தினார் டிவியஸ். நியூஸ்பிரின்ட் தாள்களை ஆலையில் அரைத்து கூழாக்கி கால்நடை தீனில் சிறிது சிறிதாகக் கலந்துவைத்தார். வெல்லமும் கலக்கப்பட்டது. இத்துடன் சோயாமொச்சை மாவும், சோளம், ஒடிவகை வைக்கோல் [illegible] சேர்க்கப்படுகின்றன. 8 சதவீதம் நியூஸ் பிரின்ட் தாள், தீவனம் வைக்கப்பட்ட எருதுகள் நாள் ஒன்றுக்கு ஒரு கிலோ கிராம எடை அதிகரிப்பதாகச் சோதனைகள் தெரிவித்தன

செய்தித்தாளில் இருக்கும் மை ஒரு கெடுதல் அல்ல என்பதையும் சோதனை காட்டியது.

இறுதி முடிவு என்ன? எல்லாச் செய்திகளும் சுவையான செய்திகள் தான். சில கால்நடைகளைப் பொறுத்தமட்டில்: இதனால் பத்திரிகைத் தொழிலும்கூடவே பயன் பெறுகிறதல்லவா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலய வழிபாடும் சமயாசாரங்களும் அவசியமா ?

கோயிலென் குளமேன் பூசையேன் பூசாரியேன் என்று சிலர் தங்களைப்பெரும் அறிவாளிகளாக நினைத்துக் கொண்டு கூறலாம். வேறு சிலர், நாங்கள் நாஸ்திகர்கள் என வெளிப்படையாகவே கூறிக்கொண்டு மனிதன் சந்திரனைச் சாடிவிட்ட இவ்வேளையில் சில மனிதர் பணத்தை விரயமாக்கி கோயில் கட்டுகிறார்களே, குளம் தோண்டுகிறார்களே. இப்பொருளை ஏழை மக்களுக்குக் கொடுத்தால் என்ன?

நிர்மாணிக்கும்போது கட்டிட வேலைக்காரர்கள் சாரம் கட்டி அதன் மேல் ஏறிநின்று கட்டிடவேலைகளைச் செய்வார்கள். கட்டிட வேலை முடிந்ததும் சாரத்துக்கு அங்கு வேலையில்லை. உண்மையில் நல்ல ஞானம் அடைந்தவர்களுக்கு கோயிலும் குளமும் தேவையில்லை தியானத்தின்கண் ஒரு நிலைப்படுத்தி மனத்தை உலகவிவகாரங்களில் சஞ்சரிக்க விடாது நிறுத்தப் பயிலாதவர்களுக்குப் பூசையும்

அனைத்தும் பரம்பொருளாகவே இருக்க, ஏன் இந்த மூர்த்தியும் அந்தப் பரம்பொருளை உபாசிக்க உதவாது? பரம்பொருளின்றி ஒரு பொருளுமில்லையாதலால் மண்ணும் பரம்பொருளே, கல்லும் பரம்பொருளே. ஒரு சிறு நீர்த்துளியும் பராசக்தியின் உருவமே. குடிக்கும் நீர் பராசக்தியே. உள் சென்று தாகத்தைத் தணிப்பது பராசக்தியே. துளசி மாலையைக் கையில் வைத்துக்கொண்டு

## பதில் தருகிறார் பரமஹம்சர்

கோவில்களுக்கு ஒதுக்கும் காணிகளை, மடங்களை வேறு தேவைகளுக்குப் பயன்படுத்தினால் என்ன? என்றெல்லாம் அறிவுரை வழங்குவார்கள்.

### ஆலயவழிபாடு யாருக்கு அவசியம்

நம் அரைகுறையறிவு நாஸ்திகம்பேசத்தான் செய்யும். ஆனால் ஆலயங்களும் மூர்த்தி வழிபாடும் எங்களுக்கு எத்தகைய முக்கியத்துவம் வாய்ந்தவையென்பதை ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் போன்ற ஞானிகள் தெளிவாக விளக்கியுள்ளனர். ஒரு வீட்டையோ அல்லது ஒரு கட்டிடத்தையோ

ஸ்ஞானமும், ஆலய வழிபாடும் அவசியமாகும்.

### பரம்பொருளின்றி

விக்கிரகம் களிமண்ணாலும், கருங்கல்லாலும் செப்பாலும் ஆனதுதானே. இதை எப்படிக் கடவுளெனத் தியானிக்கமுடியும்? இக்கேள்வியைப் பரமஹம்சரிடம் ஒருவர் கேட்டார். அப்பொழுது பரமஹம்சர் மூர்த்தியின் கீர்த்தியை தெளிவாக அவருக்கு இவ்வாறு விளக்குகிறார். மண், கல், செம்பு என ஏன் எண்ணுகிறீர்! பரம்பொருளால் ஆன உருவமென ஏன் காணமாட்டீர்? அனைத்திலும் கடவுள் இருக்க

ஹரிநாமங்களைக் கூறியே மாலுக் ஒவ்வொரு துளசிமணியும் ஹரியின் உருவமேயாகும்.'

ஆண்டவன் எங்கும் வியாபித்து இருக்கிறான் என்ற உண்மையை நாம் உணர்ந்தோமானால் ஏன் நம் மனத்தைத் தியானத்தின் பாலீடுபடுத்த ஒரு திவ்விய மூர்த்தியை வைத்துக்கொண்டு ஆராதிக்கக்கூடாது? எங்கும் நிறைந்திருக்கும் இறைவன் அம்மூர்த்தியில் இல்லாமல் போய்விடமாட்டான் மூர்த்தி பூசையில் ஈடுபடாதவர்கள் இதைச்செய்ய வேண்டியதில்லை. ஆனால் மூர்த்தி பூசை செய்பவர்களைக் குற்றம் சொல்வது அறிவீனமாகும்.

### சமயாசாரங்கள்

அடுத்துச் சமயச் சடங்குகளைப்பற்றியும் சிலர் ஏளனம் செய்வர். மனிதன் துரிதமாக முன்னேறிக் கொண்டிருக்கும் இந்த விஞ்ஞான யுகத்தில் சமயச்சடங்குகளால் என்ன நன்மையை அடையப் போகிறோம் என்று பலர் சிந்திக்காமலில்லை; கேள்வி கேட்காமலுமில்லை. அதற்கு இங்கு பரமஹம்சர் தரும் விளக்கத்தைச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள்.

'நெல்லில் முக்கியமான பொருள் அதனுள் இருக்கும் அரிசியேயாகும். அரிசியை மூடிக்கொண்டிருக்கும் உமியை நீக்கித்தான் நாம் அரிசியை உணவாகப் பயன்படுத்திக்கொள்ளுகிறோம். நெல்லாக இருப்பின் கெடாதிருக்கும். அரிசியை வயலில் விதைத்தால் பயிருண்டாகாது. நெல்லை விதைத்தால் தான் முளைக்கும். அரிசிதான் முளைப்பதாகவிருப்பினும் அது உமியால் மூடப்பட்டு நெல்லாக நிலத்தில் பதிந்தால்தான் முளைவிட்டு வளரும். நம்முடைய தர்மத்துக்குக் காப்பாகவும், உயிர் கொண்டு வேர் ஊன்றி வளர்ந்து பயிர்கொடுப்பதற்காகவுமே கிரியைகளும் முறைகளும் சடங்குகளும் திருவிழாக்களும் நெல்லின் உமிபோல அமைக்கப்பட்டன. சமைத்து உண்பதற்கு உமி வேண்டியதில்லை. அரிசிதான் வேண்டும். ஞானம் அடைந்தவனுக்குக் கிரியைகளும் திருவிழாக்களும், கோயில்களும் வேண்டியதில்லை. ஆனால் இவையெல்லாம் இல்லாமல் ஞானம் மட்டும் தனித்து உபதேசிக்கப்பட்டு இந்துதர்ம முறையாக வைக்கப்பட்டிருந்தால் அது வயலில் போட்ட அரிசியைப்போல் முளைவிடாமல் அழிந்துபோயிருக்கும்.'

ஞானம் அடைந்த பின்னர் தான் ஆசாரங்களும் கிரியைகளும் சடங்குகளும் தாமாக ஒழியும். உடலில் ஒரு புண் ஏற்பட்டால் அது மாறும் வரையில் அதற்குப் பாதுகாப்பாக மேலே பொருக்குத் தோன்றுகிறது. உள்காயம் இருக்கும்வரை பொருக்கு இருக்கத்தான் வேண்டும். புண் ஆறமுன்னர் அப்பொருக்கை நீக்கிவிடக்கூடாது. புண் ஆற நாம் அதை நீக்காமலே அது தானாக உதிர்ந்துவிடும். இதே போன்றே ஞானம் அடைந்த பின் சடங்குகளும் ஆசாரங்களும் தாமாகவே ஒழிந்து போகும். ஞானம் அடையமுன் அவற்றை ஒழிக்கப்பார்ப்பது புண் ஆறமுன் மேற்பொருக்கை எடுத்து புண் ஆறுவதைத் தடைவிதிப்பது போலாகும். எனவே ஞானம் உண்மையில் முற்றுவதற்கு முன் ஆசார வழக்கங்களை விட்டுவிடப்பார்ப்பது நல்லதல்ல.

# சிறுகதை

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

நித் துடைத்துவிட்டுக் கொண்டு அவனுடன் நடந்தார்.

முப்பத்தைந்து வருடங்களாகத் தாம் அறிந்திருந்த சிவலிங்கனுக்கும் இன்று தான் சந்தித்த சிவலிங்கனுக்கும் உள்ள மாறுதலை நினைத்து வியந்தார் ஆசிரியர். ஒருவகையில் அவனை யிட்டுப் பெருமைப்பட்ட அவர் தனக்குத்தானே கூறிக் கொண்டார்.

'இவன் இன்றுவரை எத்தனையோ பரீட்சைகளில் தோற்றி விஷேச சித்திகளை அடைந்திருக்கிறான். ஆனால் அவை ஒன்றும் பெரிதல்ல; இப்போ தோற்றியிருக்கிறானே 'இல்லறம்' என்னும் ஒரு பரீட்சை — அதில் தேறுவதுதான் முக்கியம். ஆனால் ஒன்று மட்டும் உறுதியாகக் கூறலாம். இப்பரீட்சையில் அவன் 'ரெடிஸ்' எடுக்காவிட்டாலும் 'பாஸ் மார்க்' எடுத்தே தீர்வான் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை'

(யாவும் கற்பனை)

# ஒப்பந்தங்கள்

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

### தவறுகளை நிவர்த்தி செய்யும் உரிமை

மேற்கூறிய இரு சந்தர்ப்பங்களிலும் குறிக்கப்பட்டோர் தமது ஒப்பந்தத்தில் தாமே செய்வதென நிர்ப்பந்தித்த கடமைகளை முறையே செய்யத் தவறிவிட்டனர். எனவே இச்சந்தர்ப்பங்களில் குற்றஞ் செய்யாதவர்கள் மற்றைய சாராரின் தவறுகளை நிவர்த்தி செய்விக்கும் உரிமையைச் சட்டம் போதுமான அளிக்கின்றது. இவ்வனமே சகல ஒப்பந்தங்களில் ஈடுபட்டோர்க்கும் தவறுகளை நிவர்த்தி செய்விக்கும் உரிமையைச் சட்டம் அளிக்கின்றது.

எத்தகைய நிவர்த்திகளை சட்டமூலம் பெறமுடியும் என்பதை ஆராய்வோம். தவறுகளை நிவர்த்தி செய்யும். இந்த உரிமையை நடைமுறையில் நிலைநாட்டுவதற்கென்றே நீதிமன்றங்கள் நிறுவப்பெற்று இயங்கி வருகின்றன. தற்போதைய நமது நாட்டுச் சட்டத்தின் முறையின் இலட்சியங்களோட்டு பாடுகளின்படி நீதிமன்றங்கள் மிகுந்த மதிப்புக்குரியனவாகவும், உண்மைக்கும் நீதிக்கும் நேர்மைக்கும் ஏதுவாக அமையப்பெற்று திறமை மிக்க சட்டவல்லுநர்களை நீதிபதிகளாகப்பெற்று உள்ளன. ஒப்பந்தங்களில் ஈடுபட்டு ஏமாற்றப்பட்டோர் அல்லது மறுசாராரின் தவறுதலால் நஷ்டமடைந்தோர் வேறு பிழைகளுக்குள்ளானோர் தகுந்த நிவர்த்திகளை சட்டரீதியாகப் பெறும் உரிமையுண்டு.

இதனுல் ஒப்பந்தங்களால் தவறிழைக்கப்பட்டோர் எல்லோரும் நீதிமன்றத்திற்குக் கட்டாயம் செல்ல வேண்டுமென்பதல்ல. உதாரணமாக மேற்கூறிய ஒரு ஊராஸ் சர்பத் ஒப்பந்தத்தை மீறியதாக கட்டாயம் யாராவது நீதிமன்றம் வருவார்கள் அல்லது வர வேண்டும் என்பதும் அல்ல நமது கூற்று. ஆனால் இத்தச்சிறு ஊராஸ்சர்பத் ஒப்பந்தங்களைப்போலவே ஒவ்வொரு நிமிடமும் எத்தனையோ மிகப்பெரிய ஒப்பந்தங்களும் ஏற்படுகின்றன. இந்த ஒப்பந்தங்களின்மூலம் சட்டப் பிரச்னைகள் ஏற்படின் நீதிமன்றங்கள் தீர்ப்புக்கூற நேரிடும். இதன் மூலம் மக்களிடையே இம்மன்றங்கள் நியாயத்தை நிலைநாட்டுகின்றன. இதைவிட நீதிமன்றங்கள் இருக்கின்றனவே என்ற உணர்ச்சியாலும் 'மீறினால் நீதிமன்றத்துக்கு அழைக்கப்படுவோம்' என்ற பயத்தாலும் எத்தனையோபேர் ஒப்பந்தங்களையும் அதன் நிர்ப்பந்தங்களையும் மீறாமல் சரிவர நடாத்தி வருகின்றனர்; இதேபோல் நீதிமன்றத்தின் பாதுகாப்பு இருக்கிறதே என்ற நம்பிக்கையினால் பலர் ஒப்பந்தங்களில் செயல்படுகின்றனர். இதனால் நமது அன்றாடவாழ்க்கையில் நடக்கும் சம்பவங்கள் ஒருவித குழப்பமும் சச்சரவுமின்றி இருக்க நமது ஒப்பந்தச் சட்டம் வழிவகுக்கின்றது. நமது வாழ்க்கையின் பல துறைகளிலும் இன்றியமையாததாக விளங்கும் ஒப்பந்தங்களை நடாத்தி, பரிபாலித்து, நிறைவேற்றி அதனை மீறினால் தகுந்த நிவர்த்திகளை அளித்து நீதிமன்றங்கள்மூலம் குற்றஞ்செய்வோரைக் கண்டித்துத் தண்டித்து மனித உரிமைகளைப் பாதுகாத்து வியாபாரம், தொழில்போன்ற ஆக்க வேலைகளை ஊக்குவித்து மக்கள்வாழ்க்கையைச் சுபிட்சமடையச்செய்து வருகின்றது எமது ஒப்பந்தச்சட்டம்.

(வளரும்)



குளிர்மையான, மெந்தோல் பில்டர் முனை சிகரெட்டுக்கள். தற்கால நவீன புகையின்பத்திற்கு பசுமையுடன் உங்களை அழைத்துச்செல்வன
நீடிய குளிர்மையான மறுமலர்ச்சி மெட்டர்ஹோன்
CTC சிலோன் டுபாக்கோ கம்பனி லிமிட்டெட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MANOHARA
Jaffna
Daily 4-45, 7&9-45 p.m.
Sat, Sundays 10-30
Robert Stack
Biddi Andersson
in
STORY OF A WOMAN
(adults only)

RAJAH (Jaffna)
Daily 10-30, 4-45
7-00 & 9-45
Alan Ladd
in
SHANE
(for adults-color)


REGAL Jaffna
Daily 5-15 & 7-15 p. m.
Sat. Sonday 10-30
Walt Disney's

KIDNAPPED

தினசரி 2-00, 10-00
எம்ஜிஆர்- சரோஜாதேவி
நாகேஷ்
நடித்த
ஆசைமுகம்

ராணி (யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்,
ஜெய்சங்கர் — விஜயலலிதா
நடித்த
நூற்றுக்கு நூறு

மகத்தான 3வது வாரம்
லிடோ [யாழ்நகர்]
(காலை 10-00 பி. ப. 2-00 மாலை 6-00, இரவு 9-30)
கிங்ஸ்லி (கொழும்பு) திரைகளில்
தபால்காரன் தங்கை



ஜெமினி—வாணிஸ்ரீ — முத்துராமன்
மற்றும் பலர் நடித்தது

வெற்றிகரமான 7வது வாரம்
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
பி. ப. 2-30 மாலை 6-30 இரவு 10-00
தெய்வ மகன்



சிவாஜி
[3 மாறுபட்ட வேடங்களில்]
ஜெயலலிதா
நம்பியார் — நாகேஷ்
சுந்தரராஜன்
நடித்தது.

## வினையே ஆடவர்..

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

பெண்ணினத்துக்குச் சிறுமையைக் கொடுக்கும் இச்சீதன வழக்கம், ஆணினத்துக்கும் அவ்லையே கொடுக்கின்றது. இன்று சீதனம் கேட்கும் இளைஞர், தாம் பெண்களுக்குப் பெற்றோராக வந்தகாலை எவ்வளவு கவலைக்காளாக வேண்டிவரும் என்பதை எண்ணிப் பார்ப்பாராளுல் இன்றே இக்கொடிய வழக்கத்துக்கு முற்றுப்புள்ளிபோட முனைவர்.

இன்று வேண்டப்படுவது உண்மையான மனமாற்றமே. மூடக் கொள்கைகளை முறியடிக்கவேண்டும், முற்போக்கில் ஆர்வம் நிரைவேண்டும். இந்தியாவில் இச்சீதன வழக்கத்தை நிறுத்துவதற்குச் சட்டம் வகுக்கவேண்டும் என்று முற்போக்காளர் கூறிவருகின்றனர். பொதுமக்கள் மனம்மாறினுல், சட்டம் தானுகவே அமையும். பொதுமக்கள் அறியாமைப்பேயினுல் பிடிபட்டிருக்கும்வரை சட்டமும் பயனற்றேபோய்விடும்.

### தற்சுதந்திரம் உள்ளவளாக...

காதலுக்கன்றிப் பணத்துக்காக மணக்கவரும் ஆடவரைக் கோழைகளென்றே கருதவேண்டும். பெற்றோருக்குப் பாரமாயிராமல் ஒவ்வொரு பெண்ணும் தன் பெண்மைக்கு அடுத்த ஏதாவது ஒரு தொழிலைப் பயின்று, தற்சுதந்திரமுள்ளவளாக வாழப்பழகவேண்டும். மணத்துக்காக ஏங்கியிராது, "நல்ல மணம் நேர்ந்தால் ஏற்றுக்கொள்வது இல்லாவிடில் தன்மானத்துடன் வாழ்வது" என்ற உறுதியை மேற்கொள்ள வேண்டும். இளைஞரும் மங்கையரும் இத்தகைய உறுதிபூண்டு வாழ முற்படுவரேல் சீதன வழக்கம் சில நாளில் எம் சமூகத்தைவிட்டு ஓடிவிடும்.

பெண்ணுரிமையைப் போற்றிம் சமூகம் - ஆணின் ஆண்மையை விரும்பும் சமூகம் - ஆணும் பெண்ணும் இரு கண்ணெனப் போற்றும் சமூகம் சிறுமைதரும் சீதன வழக்கத்தை ஒருபோதும் ஆதரிக்கக் கூடாது.

நாகலஸ்சினிமா
சுன்னுகம்
தினசரி: 4-30 மட்டும்
சனி, ஞாயிறு 10-30
WOMAN OF STRAW

தினசரி 6-30, 9-45
சனி, ஞாயிறு 2-30
ஜெமினி-நிர்மலா
நடித்த
பூவா? தலையா??

## வரி விளம்பரம்

மோட்டார் வாகனங்கள் மற்றும் சகலவிதமான யந்திரங்களுக்கும் உதிரிப்பாகங்கள் ஜெர்மனியில் பயிற்றப்பட்ட பொறியியலாளர்களின் மேற்பார்வையில் செய்து கொடுக்கப்படும். ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 3625

ராதா வைலாக் முகப்பரு வேனல்கட்டி, சொறி, சிரங்கு, கரப்பான், திப்பட்ட புண் முதலிய சரும நோய்களுக்குசிறந்தமருந்து எஸ். சுப்பிரமணியம் கொம்பனி, 53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். 160, செட்டியார் தெரு, கொழும்பு. 3624

### தேவை

கைத்தறி நெசவு வேலைக்கும் நூல்நூற்பதற்கும் ஆட்கள் உடனடியாகத் தேவை. தொடர்பு கொள்ளவும். 97/2. மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 3634

தெல்லிப்பழை ஐக்கிய வைத்திய சாலை சங்கம், மருந்துச்சாலை ஆண் உதவியாளர் இருவர் (Dispensers) தேவை. வயது 25க்கு மேற்பட்டவர்களாய் G. C. E. (O. L.) அல்லது அதற்கு மேற்பட்ட பரீட்சையில் சித்திபெற்றவர்களாயும் இரசாயனப் பாடத்திலும் ஆங்கிலப்பாடத்திலும்சித்தி பெற்றவர்களாயுமிருத்தல் வேண்டும். அனுபவமுடையவர்களுக்கு மதிப்புக் கொடுக்கப்படும். விண்ணப்பம் முடியுந்திகதி10-10-71 காரியதரிசி. 3635

50 ஏக்கர் காய்க்கும் இளந் தென்னம்பிள்ளைகளுடன் கூடிய தென்னந்தோட்டம் பளை சுற்றுடலில் பிரதான ரெயில் பாதைக்கு அருகாமையில் இருப்பது விற்பனைக்குண்டு. இ. சின்னத்துரை, 42, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 495 3326

### விற்பனைக்கு

83ஸ்ரீ 4000 இலக்கமுள்ள ஒஸ்ரின் கேம்பிரிச் கார் ஒன்று மிகவும் நல்லநிலையில் உள்ளது விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு ஞாயிற்றுக்கிழமையில் 98, பலாலி ரோட் கந்தர் மடத்திலும் ஏனைய நாட்களில் காலையில் சிலோன் வொல்பக்சனரி வேக்ஸ் (சுன்னுகம்) சுன்னுகத்திலும்தொடர்புகொள்ளவும். 3636

வெஸ்லிசினிமா
பி. ப 2-30, 6-30, 10-00
எம். ஜி. ஆர் -சரோஜாதேவி
எம் ஆர்ராதா-கண்ணும்பா
நடித்த
நீதிக்குப்பின்
பாசம்
(புதிய கொப்பி)

### விற்பனைக்கு

யாழ்ப்பாணம் பெரியகடையில் ஆஸ்பத்திரி வீதியில் மேல்மாடிக்கடை விற்பனைக்கு உண்டு தொடர்பு கொள்க. 86, காலி ரோட், தெஹிவளை. 3638

யாழ்ப்பாணம் 4ம் குறுக்குத் தெருவில், 4 அறைகள், 2 விறாந்தைகள், சமையலறை, கிணற்று நீர் வசதிகளுடன் 2 3/4 பரப்பு நிலத்தில் அடங்கும் 81/1ம் இலக்க வீடு விற்பனைக்கு உண்டு. விபரங்கட்கு துரைராசா, சண்டிலிப்பாய் வடக்கு, சண்டிலிப்பாய் என்ற விலாசத்திற்கு விண்ணப்பம் செய்யவும் 3621

### தவறிவிட்டது

இ. கணபதிப்பிள்ளை என்பவருடைய சுப்பல் காணுமற்போய்விட்டது. இதைக் கண்டெடுத்தவர் 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சுப்பல் நம்பர் X 228191. கி சே. இலக்கம் J 27.

3637

### கேள்விப் பத்திரம்

மருத்துத்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் சுமார் 6800 சாக்குகள் விற்பனைக்குண்டு. அதற்கான கேள்விப்பத்திரங்கள் 10-10-71க்கு முன் பதிவுத்தபாலகள் மூலம் அனுப்பப்படவேண்டும். இதற்கான படிவங்களை ரூபா 20/-கட்டி பொதுமுகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொது முகாமையாளர்
மருத்தித்துறை
ப. நோ. கூ. சங்கம்
மருத்தித்துறை.
3056

### நூற்றுண்டு ...

(6ம் பக்கத்தொடர்ச்சி)


நாட்டின் பொருளாதாரம் தங்கியுள்ளது இத்தகைய பல மக்கள் கணக்கெடுப்பொன்றினுல்தான் தரமுடியும். எனவே ஒவ்வொரு பிரஜையும் இத்தகையான பணிக்கு ஒத்துழைத்து குடிசன மதிப்பீட்டு இலாகாவுக்கு உங்களால் அளிக்கக் கூடிய ஆகக்கூடிய உதவியை அளிக்கவேண்டும். இவ்வாறு செய்வதன்மூலம் ஒவ்வொரு பிரஜையும் மறைமுகமாக நாட்டின் அபிவிருத்திக்கு உதவுபவர்கள் ஆகிறீர்கள்.

### நமது நூல் நிலை..

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

இவ்வாறு பல்வேறு சிறப்புகளும் பொருந்தியுள்ள இத் தமிழிசைப் பூமாலை சில வட மொழிச் சொற்களும் தவிர்க்கப்பட்டு புனையப்பட்டிருந்தால் இன்னும் அழகாகத் திகழ்ந்திருக்கும் எனலாம்.

— புலவர்



விண்ஸர்
யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
ஜெமினிகணேசன்
சௌகார்ஜானகி
(இரு வேடங்களில்)
ரவிச்சந்திரன்
எம். ஆர். ஆர். வாசு
வி. எஸ். ராகவன்
பேபி ராலி
நடித்த
காவியத் தலைவி
கதை-வசனம்-டைரக்ஷன்: கே. பாலசந்தர்

யாழ்ப்பாணம் 'லக்சல'விற்கு
பொருட்கள் விற்பனை

வடமாகாணத்தில் சிறு கைத்தொழிலில் தரமான பொருள் உற்பத்தி செய்பவர்கள் தங்கள் பொருட்களை யாழ்ப்பாணம் 'லக்சல'விற்கு விற்பனைசெய்ய விரும்பினுல் தயவு செய்து முகாமையாளருடன் தொடர்பு கொள்ளவும்.

பின்வரும் பொருட்களுக்கு விசேஷ கவனம் செலுத்தப்படும்


1. பனம் பொருட்கள்
2. பன்னவேலைப் பெட்டிகள்
3. பாய்கள்
4. நல்லெண்ணெய்
5. கைத்தறிப்புடவைகள்

முகாமையாளர்.
"லக்சல"
யாழ்ப்பாணம்.

3051

போயா தினத்தையொட்டி இன்று மட்டும் படக் காட்சிகள் இல்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மணிமொழிகள்

பரஸ்பர நலன்களுக்கிடையே சமரசம் செய்வதற்காக அமைச்சர் பதவிகளை உருவாக்குவது தவறாகும். நான் பிரதம மந்திரியாக இருந்து, இத்தகைய கோரிக்கைகளினால் துன்புறுத்தப்பட்டால் மற்றொரு தலைவரைத் தேர்ந்தெடுக்குமாறு எனது வாக்காளர்களைக் கேட்டுக்கொள்வேன். இந்தப் பதவிகளை லேசாகப் பிடித்துக்கொள்ளவேண்டும்; கிடாப்பிடியாக இருக்கக்கூடாது. இவை முள் கிரீடங்களே, புகழ் கிரீடங்கள் அல்ல.

—மகாத்மா காந்தி.




## குலுக்கல் முடிவுகள்

கொழும்பு, சனிக்கிழமை

நேற்று அனுராதபுரத்தில் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட மகாஜன சம்பத 80-வது குலுக்கல் முதல் மூன்று முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு

15 U 000915 ரூ. 56,060

2-வது பரிசு

21 X 000981 ரூ. 56,060

3-வது பரிசு

23 P 000596 ரூ. 56,060

தலா ரூபா 280 பெறும் 200 டிக்கெட்டுகளின் விபரம் வருமாறு:-

| | |
|---|---|
| 06 A 000160 | 03 A 000074 |
| 04 A 000267 | 08 A 000350 |
| 21 A 000024 | 18 A 000835 |
| 03 B 000310 | 08 B 000851 |
| 09 B 000846 | 06 B 000212 |
| 24 B 000536 | 16 B 000575 |
| | 24 B 000146 |
| 19 B 000521 | 13 B 000887 |
| 23 B 000193 | 20 B 000366 |
| 24 B 000536 | 23 B 000530 |
| 16 C 000839 | 01 C 000299 |
| 01 C 008859 | 01 C 000742 |
| 10 C 000060 | 07 C 000207 |
| 15 C 000312 | 24 C 000087 |
| 03 D 000204 | 02 D 000758 |
| 13 D 000414 | 18 D 000778 |
| 13 D 000691 | |
| 09 E 000145 | 02 E 000159 |
| 08 E 00027[illegible] | 05 E 000008 |
| 01 E 000218 | 09 E 000788 |
| 14 E 000383 | 20 E 000668 |
| 09 F 000449 | 03 F 000378 |
| 06 F 000236 | 17 F 000046 |
| 11 F 000339 | 14 F 000283 |
| 15 F 000355 | 19 F 000791 |
| 04 G 000727 | 06 G 000601 |
| 12 G 004310 | 16 G 000732 |
| 17 G 000022 | 14 G 000281 |
| 19 G 000613 | |
| 03 H 000307 | 11 H 000248 |
| 11 H 000619 | 13 H 000939 |
| 16 H 000487 | 12 H 000366 |
| 16 H 000357 | |
| 07 J 000711 | 02 J 000634 |
| 08 J 000391 | 08 J 000736 |
| 09 J 000742 | 16 J 000626 |
| 12 J 000121 | 11 J 000240 |
| 15 J 000977 | 14 J 000132 |
| 03 K 000453 | 08 K 000775 |
| 05 K 000174 | 04 K 000448 |
| 02 K 000063 | 07 K 000729 |
| 01 K 000324 | 02 K 000626 |
| 15 K 000785 | 13 K 000620 |
| 18 K 000992 | 20 K 000940 |
| 18 K 000485 | |
| 02 L 000437 | 06 L 000220 |
| 16 L 000082 | 20 L 000260 |
| 12 L 000049 | 15 L 000204 |
| 12 L 000492 | 20 L 000663 |
| 20 L 000425 | 21 L 000069 |
| 01 M 000327 | 06 M 000365 |
| 04 M 000511 | 02 M 000145 |
| 04 M 000070 | 15 M 000136 |
| 15 M 000660 | 13 M 000734 |
| 15 M 000823 | |
| 02 N 000648 | 02 N 000985 |
| 04 N 000380 | 20 N 000787 |
| 20 N 000765 | 17 N 000864 |
| 05 O 000133 | 07 O 000952 |
| 09 O 000944 | 22 O 000903 |
| 03 P 000535 | 02 P 000929 |
| 08 P 000628 | 04 P 000656 |
| 24 P 000008 | 14 P 000950 |
| 20 P 000487 | 18 P 000485 |
| 21 P 000659 | 17 P 000802 |
| 10 Q 000177 | 04 Q 000198 |
| 07 Q 000784 | 06 Q 000992 |
| 12 Q 000[illegible]72 | 19 Q 000100 |
| 05 R 000048 | 13 R 000487 |
| 19 R 000436 | 13 R 000008 |
| 20 R 000341 | 13 R 000505 |
| 16 R 000330 | 20 R 000315 |
| 16 R 000411 | |
| 02 S 000306 | 09 S 000152 |
| 08 S 000029 | 07 S 000716 |
| 23 S 000463 | 24 S 000948 |
| 24 S 000054 | |
| 06 T 000033 | 10 T 000171 |
| 21 T 000130 | 13 T 000215 |
| 12 T 000243 | 11 T 000304 |
| 31 T 000501 | |
| 04 U 000189 | 04 U 000097 |
| 03 U 000886 | 06 U 000486 |
| 05 U 000086 | 07 U 000618 |
| 22 U 000723 | 16 U 000[illegible]83 |
| 22 U 000819 | 18 U 000881 |
| 06 V 000669 | 02 V 000515 |
| 02 V 000948 | 11 V 000309 |
| 20 V 000594 | 18 V 000456 |
| 14 V 000683 | |
| 06 W 000392 | 02 W 000135 |
| 01 W 000351 | 09 W 000370 |
| 07 W 000786 | 23 W 000654 |
| 14 W 000674 | 23 W 000960 |
| 20 W 000574 | 24 W 000203 |
| 20 W 000019 | 15 W 000449 |
| 03 W 000964 | 05 W 000385 |
| 13 W 000602 | 17 W 000554 |
| 03 Y 000375 | 03 Y 000020 |
| 06 Y 000614 | 02 Y 000203 |
| 04 Y 000735 | 07 Y 000358 |
| 14 Y 000989 | 11 Y 000135 |
| 11 Y 000071 | 10 Y 000252 |
| 05 Z 000716 | 08 Z 000491 |
| 22 Z 000022 | 17 Z 000740 |
| 12 Z 000622 | |

(இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்)

ஈழநாடு

விரோதிகிருது வருடம் புரட்டாசி மாதம் 17ம் திகதி (3—10—71)

## வாழ்க மகாத்மா!

மகாத்மாகாந்தி இலங்கைக்கு விஜயஞ்செய்த போது இலங்கை - இந்தியா இவ்விருநாடுகளின் உறவுகளையும் பலப்படுத்தவேண்டுமென்று கூறினார்.

இருநாடுகளும் விடுதலைபெற்றன. தேர்தல் மூலம் இருநாட்டுப் பொதுமக்களும் இருபெண்களையே பிரதமர்களாகத் தெரிவுசெய்திருக்கிறார்கள். இவ்விரு பெண் பிரதமர்களுக்குமிடையே இன்று நல்லுறவுகள் நிலவிவருவது வரவேற்கத்தக்கதும் நம்பிக்கை அளிப்பதுமாகும்.

அரசியல் விடுதலையடைந்தபின் இருநாடுகளுக்கும் மலைபோன்ற பிரச்னைகள் ஏற்பட்டுள்ளன. இந்தியஉபகண்டத்திலே யுத்தம் மூண்டுவிடக்கூடிய ஆபத்து ஏற்பட்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஈழத்திலுங்கூட, சமீபத்தில் ஏற்பட்ட பயங்கர இயக்கத்தால் அமைதி குலைந்தது. நாம் பெற்ற சுதந்திரத்தையும் இழந்துவிடக்கூடிய ஆபத்து உருவாயிற்று. அந்த ஆபத்து அடக்கப்பட்டிருப்பினும் அதுநீங்கியபாடில்லை.

பெண் பிரதமர்களான இவ்விருவருக்கும் மட்டுமன்றி, இருதேச பொதுமக்களுக்கும் இன்று பெரும் திகைப்பு ஏற்பட்டுள்ளது. யுத்த ஆபத்திலிருந்தும், அராஜகத்திலிருந்தும் இருநாடுகளையும் காப்பாற்றுவதெப்படி? என்பதே இன்றைய பொதுப்பிரச்னை.

இப்பொதுப் பிரச்னையைத் தீர்க்க, மகாத்மா காந்தி காட்டியுள்ள அகிம்சை, சத்தியம் எனும் இருநெறிகளும்தான் சரியான பத்திரமான வழிகளாகும்.

மகாத்மாவின் பூதவுடல் மறைந்தாலும், அவர் கூறிய உயிர்போன்ற இருநெறிகளும் என்றென்றும் உலகமக்களுக்கு நல்வழிகாட்டக் காத்துள்ளன. வாழ்க மகாத்மா!

ஏழை மக்கள் பயன் பெற

# மாவட்டங்கள் தோறும் வைத்தியசாலைகள் வேண்டும்

## வரவேற்பு விழாவில் எம். சி.

(மாவிட்டபுரம் நிருபர்)

"இலங்கையில் சகல பகுதியிலும் உள்ள ஏழைமக்கள் பயன்பெற மாவட்டங்கள் தோறும் வைத்தியசாலைகளை நிறுவ வேண்டும்" என்று நியமன எம் பி திரு எம் சி சுப்பிரமணியம் தெல்லிப்பழையில் சுகாதார அமைச்சருக்கு அளிக்கப்பட்ட வரவேற்பு வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

தெல்லிப்பழை அரசினர் வைத்தியசாலையை அமைச்சர் திறந்து வைத்தபின் அங்கு எம் சிதம்பரநாதன் தலைமையில் நடந்த வரவேற்பு விழாவில் கலந்து உரையாற்றிய எம் சி சுப்பிரமணியம் மேலும் கூறியதாவது:

"நாட்டில் வாழும் ஏழைமக்கள் இலவசமாக சிகிச்சை பெற்று சுகதேகிகளாகவாழ அரசு மருத்துவமனைகளை அமைத்துள்ளது. இதேவகையில் அமைந்த இவ் வைத்தியசாலை சகலவசதிகளுடன் செயல்பட அமைச்சர் உதவவேண்டும். இங்கு சகலபகுதிகளையும் ஆரம்பித்துபூரணத்துவம்வாய்ந்த வைத்தியசாலை யாக்கவேண்டியதவசியமாகும்" என்றார்.

நல்லூர் எம் பி திரு சி அருளம்பலம் பேசுகையில், சுகாதார அமைச்சர் நல்ல மனம்உள்ளவராகவிளங்கியதால் தமிழ்மக்களுக்கு பெரிதும் பயனளிக்கும் இவ்வைத்தியசாலையை திறக்கும் வாய்ப்பைப் பெற்றார். நல்லவர் காலத்தில்தான் நல்ல செயல்கள் நடக்கும் என்று பெரியோர்கள் கூறுவார்கள். இத்தகையநல்லபண்புள்ள இவர் இதைத் திறந்து வைத்தது தமிழருக்குப் பெரும் பேறாக அமைந்துள்ளது என்றார்.

திரு வி பொன்னம்பலம் பேசுகையில், ஒரு வைத்தியசாலையில் பல இனத்தையும், சாதியையும் சேர்ந்த வைத்தியர்களும், ஊழியர்களும் கடமையாற்றுவார்கள் ஆஸ்பத்திரிக்கு ஒருவர் சென்றால் "நீ என்னசாதி, என்ன இனம்" என்று கேட்பதில்லை. தமிழனுக்கு ஒரு உபகரணம் சிங்களவனுக்கு ஒரு உபகரணம் வைத்து சிகிச்சை அளிப்பதில்லை. சிங்களவனுக்கு சிங்களவனின் இரத்தம் ஏற்ற வண்டுமென்றும் தமிழனுக்கு தமிழனின் இரத்தம் ஏற்ற வேண்டுமென்றும் இல்லை. இனங்களுக்கிடையிலும், சாதிகளுக்கிடையிலும் ஐக்கியத்தை உருவாக்க வைத்தியசாலை நல்லசாதனமாக அமைந்துள்ளது.

அரசியல்துறையில் பேதம் இருந்தாலும் விஞ்ஞானத்தின் அடிப்படையில் பேதம் இருக்காது. எமது நாட்டில் வாழும் மக்களிடையே இனம், மொழி, கலாச்சாரம் ஆகியவற்றில்வேறுபாடு இருந்தாலும் நாட்டின் அபிவிருத்தியில் ஐக்கியப்பட வேண்டியது அவசியமாகும். இதன் அடிப்படையில் இலங்கையில் சோஷலிச சமுதாயம் உருவாக இருக்கிறது என்றார்.

### மஹோற்சவம்

யாழ்ப்பாணம், ஞாயிறு இன்று கன்னாதிட்டி ஸ்ரீ காளிதேவி அம்மன் கோவில் மஹாசந்திர பூஜை மஹோற்சவம் நடைபெறவிருக்கிறது. ஸ்ரீ காளிதேவிக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்ற பின்னர், திருவுலாக் காட்சி இடம்பெறும். விசேஷ மேளக்கச்சேரிகள், இன்னிசைக் கச்சேரி ஆகியனவும் நடைபெறும்.

### எகிப்து நிராகரிப்பு

நியுயோர்க் ஒக் 2 சுயஸ்கால்வாயைத் திறப்பது பற்றி முடிவுசெய்ய எகிப்து இஸ்ரேல் ஆகிய நாடுகளின் வெளிநாட்டமைச்சர்கள் விரைவில்கூடிப் பேசவேண்டுமென இஸ்ரேல் வெளியுறவு அமைச்சர் திரு. இபான் வெளியிட்ட கருத்தை எகிப்து நிராகரித்துள்ளது.

### சரஸ்வதி பூஜை

யாழ்ப்பாணம், ஞாயிறு விஜயதசமியன்று இலங்கை வங்கி அலுவலக ஊழியர்கள் சரஸ்வதி பூசையை வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். இவ்விழாவில் இன்னிசை, பண்ணிசை, சமயச்சொற்பொழிவுகள் மற்றும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

### முஜிபுரை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை நிருவாகசேவை நியமனங்களுக்கான போட்டித் தேர்வுக்குத் தோற்றுவதற்கு அஞ்சல் திணைக்களத்தின் ஊழியர் மாத்திரம் தடைசெய்யப்பட்டிருப்பதை மிகவும் பாரபட்சமான செயல் எனச் சங்கம் கண்டிக்கிறது. எமது திணைக்களத்திலுள்ள ஊழியர்களுக்கு இழைக்கப்பட்டிருக்கும் அநீதியை காலந்தாழ்த்தாது நீக்கி விதிக்கப்பட்டிருக்கும் கட்டுப்பாட்டை உடனடியாக மீளப்பெறுமாறு சங்கம் அரசியலாளரை மீண்டும் கேட்டுக்கொள்கிறது.

ஞாயிறு விடுமுறைத்திட்டத்தை அரசாங்கம் மீண்டும் கொண்டுவந்ததற்காக அரசாங்கத்தைப் பாராட்டுவதுடன் வாரம் ஐந்து நாள் வேலைத்திட்டத்தையும் அமுல் நடத்துவதற்குவேண்டிய நடவடிக்கைகளை அரசாங்கம் உடனடியாக எடுத்தல்வேண்டுமெனச் சங்கம் கேட்டுக்கொள்கிறது.

### எம். பி.க்கள் செல்லமுடியாது

கொழும்பு, சனி நாட்டிலுள்ள எந்தச் சிறைச்சாலைக்குள்ளும் பாராளுமன்ற அங்கத்தவர்கள் அரசாங்கத்தின் உத்தரவின்றி செல்லமுடியாது.

விரும்பினாக்கு

EN - A 50 விற்பனைக்கு உண்டு. 97/1, பருத்தித்துறை வீதி (வீரகாளி அம்மன் கோவில் முன்பாக), யாழ்ப்பாணம். 3638

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் [illegible] [illegible] வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org